மன்றம்

இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

4 | 1-7-55 | இதழ் 5



ஓமியோபதி மருத்துவ முறையைக் கண்டுபிடித்த

சாமுவல் ஆனேமன்

நாடு அணா 4 ★ மாதமிருமுறை ★ வெளிநாடு அணா 5

நடிப்புத் திறமையின் நயம்

நாடக மேடையில் நடிகர்கள் நடித்துக்கொண்டிருக்கும்போது, வாய் தவறிப் பொருத்தமில்லாத சில சொற்களும் சில நேரங்களில் வந்து விழுந்துவிடுவதுண்டு. இத்தகைய தவற்றினின்றும் தப்பினுர்கள் என்று, மிகச் சிறந்தநடிகர்களில் கூட, ஒருவரையும் சுட்டிக்காட்ட முடியாது. பொதுவாக எல்லா நடிகர்களுமே இந்தத் தவறுக்கு எப்பொழுதேனும் ஒரு முறை இரையாகியே யிருப்பார்கள்.

தவற்றைத் தவறு என்று பொதுமக்கள் புரிந்துகொள்வதற்கு முன்பே, வேறு ஏதேனும் பொருத்தமான சமாதானம் சொல்லித் தப்பித்துக்கொள்வது என்பது, மிகச்சிறந்த ஒருசில நடிகர்களால்தான் முடியும்.

சென்னை ஒற்றவாடைக் கொட்டகையில், "திராவிடன்" வளர்ச்சி நிதிக்காக அறிஞர் அண்ணு அவர்கள் 'சந்திரமோகன்' நாடகத்தை நடத்தினுர்கள். அதில் அண்ணு அவர்கள் வழக்கம்போல் 'காகப்பட்டர்' உறுப்பை ஏற்று நடித்தார்கள்.

காகபட்டரும் அவரது முக்கிய சீடனும் உரையாடும் கட்டம். சீடன் குருவிடத்தில் சில ஐயப்பாடுகளைக் கூறி விளக்கும்படி கேட்டுக்கொண்டிருக்கிருன்.

உரையாடலின்போது காகபட்டர் சீடனைப் பார்த்து, "ஏண்டா, மண்டு! கிருஷ்ணனுக்குப் பதிவிரதைகள் யார் யார்?" என்று கேட்கிருர்.

அதற்குச் சீடன் "பாமா, சுமத்திரை......" என்று அடுக்கிக்கொண்டு போகிருன்.

சீடன் ராதை, ருக்மணி பெயரைச் சொல்லுவான் என்று காகப்பட்டர் எதிர்பார்க்கிருர். அவன் அவர்கள் பெயர்களைச் சொல்லாமல் வேறு யார் யார் பெய்ரையோ சொல்லிக்கொண்டிருப்பதைக் கேட்ட காகப்பட்டர் சீடனை உடனே தடுத்து, "டேய், டேய்! நிறுத்துடா! அவாளெல்லாம் அவருக்கு 'எக்ஸ்ட்ரா'......!" என்று ஆங்கிலச் சொல் ஒன்றை வாய்தவறிச் சொல்லிவிட்டார். நாடகம் பார்த்துக்கொண்டிருந்தவர்கள் உடனே கொல்லென்று சிரித்துவிட்டார்கள்.

அறிஞர் அண்ணு அவர்கள் அந்தத் தவற்றினின்றும் தம்மைச் சமாளித்துக் கொள்ள "என்னடா, மண்டு! குரு என்ன புதிதாக ஆங்கிலம் பேசுகிருரே! என்று பார்க்கிருயோ!" என்று சீடனைப் பார்த்துக் கேட்கிருர்.

"ஆமாம் சுவாமி! எப்பொழுது எப்படி ஆங்கிலம் கற்றுக்கொண்டீர்கள்?" என்று அவனும் அண்ணுவுக்கு ஏற்றபடி திருப்பிக் கேள்வி கேட்கிருன்.

உடனே காகப்பட்டரான அண்ணு, "நமது நாட்டுக்கு இப்போ புதிதா பரங்கியாள் வந்திருக்காளே பார்த்தியோ! அவாள்ட்டேயிருந்து இப்போதான் கொஞ்சம் கொஞ்சமாகக் கத்துண்டு வர்ரேன்!" என்று விடைகூறி நிலைமையைச் சமாளித்துக்கொள்கிருர்.

சிவாஜி காலத்திலேயே வெள்ளையர்கள் இந்தியாவுக்கு வந்துவிட்டார்கள் என்ற வரலாற்று உண்மையை அடிப்படையாகக் கொண்டு நிலைமையை அண்ணு அவர்கள் சமாளித்துக்கொண்டார்கள். பிறரால் இவ்வளவு அழகாக இந்த நிலைமையைச் சமாளித்திருக்க முடியுமா? என்பது ஐயப்பாடே!

அறிஞர் அண்ணுவின் நயம்பட்ட நடிப்புத்திறமைக்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

மன்றம்

இரா. செழியன், எம்.ஏ.

1 - 7 - 55 வெள்ளிக்கிழமை

பாடம் பயிற்றுவிக்கும் மொழி

பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் கல்வி கற்பிக்கும்மொழி, தமிழகத்தைப் பொறுத்தவரையில் தமிழாகத்தான் இருக்கவேண்டும் என்று, சென்னை அரசியலார் அதற்கென்று 18-6-55-ல் கூட்டிய வல்லுநர்கள் மாநாட்டில் முடிவுசெய்திருப்பது மகிழ்ச்சியுடன் வரவேற்கத் தக்கதொன்றாகும்.

கல்வி வல்லுநர்களும், கல்வித்துறை அலுவலாளர்களும். தமிழறிஞர்களும் அந்த மாநாட்டில் கூடியிருந்ததும், அவர்களில் பெரும்பான்மையோர், தமிழ் எல்லாக் கல்வித் துறை நிலைகளிலும் பாடமொழியாக விளங்க வேண்டிய இன்றியமையாமையை வற்புறுத்திக் கூறியிருப்பதும் போற்றத்தக்கனவாகும்.

வட்டாரமொழி பாடமொழியாக ஆகும் போது, ஆங்கில மொழியை எந்தவகையிலும் புறக்கணிக்காமல், அதில் பொதுவாக எல்லா நிலை மாணவர்களும், குறிப்பாகக் கல்லூரி மாணவர்கள் போதிய பயிற்சிபெறும் அளவுக்கு, அதற்குப் பாடத்திட்டத்தில் உரிய இடம் அளிக்கவேண்டும் என்று அந்த மாநாடு முடிவு எடுத்திருப்பதும் போற்றுவதற்குரியதாகும்.

வட்டார மொழியில் கலைச்சொற்களையும், அறிவியற் சொற்களையும், பல்வேறு துறை நூல்களையும் உருவாக்க வல்லுநர் குழுக்கள் (Expert Committees) அமைக்கவேண்டும் என்று மாநாடு கூறியிருப்பதும் வரவேற்கத் தக்கதாகும்.

வட்டார மொழியைக் கல்லூரிப் பாடமொழியாக ஆக்குவதற்குச் சிலர் மயங்குவதற்குக் காரணம், அறிவியற் பாடங்களை வட்டார மொழியில் அவ்வளவு எளிதில் கற்பிக்க முடியுமா என்று அவர்கள் ஐயுறுவதேயாகும். அறிவியற் சொற்களை வட்டாரமொழியில் கண்டுபிடிப்பதன் மூலம், அத்தகையோரின் ஐயுறவை நாளடைவில் எப்படியும் போக்கி விடலாம். அறிவியற் சொற்களை வட்டார மொழியில் காணமுடியுமா என்றால், உறுதியாக முடியும். ஆங்கிலத்திலும் தமிழிலும் நன்கு தேர்ச்சியுற்று, பல்வேறு அறிவியற் றுறைகளில் பெயர்பெற்று விளங்கும் வல்லுநர்களைக்கொண்டு உறுதியாகத் தேவையான சொற்களைக் காணலாம். அத்தகையதொரு குழுவை அமைக்க அந்த மாநாடு முன்வந்திருப்பது மிக்கப் பூரிப்பைத் தருகிறது. தமிழ்மொழியிடத்தில் மாசு மறுவற்ற நீங்காப் பற்றுகொண்டோரும், ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றோரும், அவ்வவ் துறையில் பெயர் போனோரும் ஆகிய சிறந்தவர்களைத் தேர்ந்தெடுப்பதில்தான், அரசாங்கத்தின் முக்கிய பொறுப்பு அமைந்திருக்கிறது. அதில் யாதொரு குறைபாட்டிற்கும் இடமளிக்காமல் அரசியலார் நடந்துகொள்ளவேண்டும் என்று பெரிதும் எதிர்பார்க்கிறோம்.

சப்பான், சீனா போன்ற கீழைநாடுகள் தத்தம் தாய்மொழியிலேயே அறிவியற் பாடங்களைக் கற்பித்து அந்த நாடுகளை மிக மேம்பாட்டிற்குக் கொணடுவந்திருககும்போது, உயர் தனிச் செம்மொழிகளில் சிறந்த ஒன்றாக விளங்கும் தமிழால் மட்டும் எப்படி அச்செயல் முடியாமற்போகும்? முயன்றால் உறுதியாக முடியும்!

இப்பொழுதே சென்னைப் பல்கலைக்கழகமும், அண்ணாமலைப் பல்கலைக்கழகமும் அறிவியல் நூல்கள் சிலவற்றைத் தமிழில் கொண்டுவந்திருக்கின்றன. தனிப்பட்டவர்களும் சில நூல்களை எழுதி வெளியிட்டுள்ளனர். அவைகளில் சில பரிசுகளும் பெற்றிருக்கின்றன. இவற்றையெல்லாம் ஓரளவுக்குப் பயன்படுத்திக் கொண்டு, கல்லூரிப் பாடங்களைத் தமிழில் கற்பிக்க முயலலாம்.

தமிழைவிட எல்லாவகையிலும் குறைபாடுடைய இந்தியை அரசியல் மொழியாகவும், பாடமொழியாகவும் ஆக்க முடியும் என்று இந்திய அரசியலார் முயற்சி எடுத்திருக்கும் போது, தமிழகத்தைப பொறுத்தவரையில் அரசியல் மொழியாகவும் பாடமொழியாகவும் தமிழை ஆக்க ஏன் இயலாது? இந்தியைப் பாடமொழியாக ஆக்க, இந்திய அரசியலார் செலவிடும் அளவு இலட்சக்கணக்கான ரூபாய்களைத், தமிழுக்கும் செலவிட்டால், தமிழ்

கருத்துக் கதிர்

கிரகணம் பற்றிய மூடநம்பிக்கை

சூரிய—சந்திர கிரகணம் ஏற்படும்போது முன்பும் பின்பும் குளிக்கவேண்டும் என்றும், உண்ணாநோன்பு கொள்ளவேண்டும் என்றும், செபம் செபிக்கவேண்டும் என்றும், தர்ப்பணம் பண்ணவேண்டும் என்றும் கருதி, இந்து மதத்தைச் சார்ந்தோர், அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

மேற் சுட்டிக்காட்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டிய அளவுக்குச் சூரிய கிரகணமோ அல்லது சந்திர கிரகணமோ மக்களுக்குக் கேடுபயக்கக்கூடியனவோ என்று செய்தித் தாள் நிருபர்கள், அண்மையில், இந்திய வானிலை ஆராய்ச்சிக்கூடங்களின் தலைமை இயக்குநர் (Director general of Observatories of India) ஆகிய தோழர் எசு. பாசு அவர்களைக் கேட்டபோது, மேற்கண்ட நடவடிக்கைகளைப் பின்பற்றவேண்டிய அளவுக்குக் கிரகணம் எந்தக்கேட்டையும் செய்வதில்லை என்றும், கிரகணத்தால் ஏற்படும் விளைவுகளுக்கும் மேற்கண்ட நடவடிக்கைகளுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்றும், இந்த நடவடிக்கைகளெல்லாம் மூட நம்பிக்கையின்பாற்பட்டவைகளாகும் என்றும் அவர் தெள்ளத் தெளிவாகக் கூறியுள்ளார். அறிவியல் கண்ணோட்டத்தில் நின்று பார்க்கும்போது, இந்த நடவடிக்கைகளுக்கு அடிப்படை ஏதும் இல்லை என்றும் அவர் கூறியுள்ளார். வழக்கமாகச் செய்யப்பட்டுவருகிற மூடநம்பிக்கை என்பதைத்தவிர வேறு ஒன்றும் சிறப்பாக இந்நடவடிக்கைகளைப் பற்றிக் கூறுவதற்கில்லை என்றும் அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

கிரகணம், காந்தத் துறையில்* வேண்டுமானால் சிற்சில மாறுதல்களை உண்டாக்கக்கூடும். சிறிது நேரம் மட்டுமே தோன்றி மறையக்கூடிய கிரகணத்தால், வானிலையில் கணக்கிடக்கூடிய மாறுதல் ஏற்பட்டுவிடும் என்று சொல்லுவதற்கில்லை. அப்படிக் குறிப்பிடத்தகுந்த விளைவு ஏதும் ஏற்படுவதில்லை. சூரிய கிரகணம் விலங்கு—பறவைகளிடத்தும் எந்த மாறுதலையும் உண்டாக்கிவிடாது, சூரியன் மறையும்போது மாலை வந்துவிட்டது

இந்தியைவிட எவ்வளவோ சிரியதாகவும் உயரியதாகவும் விளங்கும். இந்திய அரசியலார் அப்படிச் செலவிட முன்வருவார்களா என்பதுதான் கேள்வி! நமது வரிப்பணத்தின் ஒரு பகுதி நமக்குத் தேவையற்ற இந்திக்குப் பயன்படுத்தப்படுகிறது; ஆனால் தாய்மொழியாம் தமிழுக்குப் பயன்படுத்தப்படவில்லை. வடநாட்டோடு தென்னாடு பிணைந்திருக்கிறவரையில் இந்த அவலநிலை இருந்தே தீரும்.

கல்லூரிகளில் தமிழ் மொழிப் பயிற்சியும் ஆங்கிலமொழிப் பயிற்சியும் மட்டும் கட்டாயமாகத் தமிழகத்தைப் பொறுத்தவரையில் இருக்கவேண்டும். வேறு மொழி எதுவும் கட்டாயமாக இருக்கவேண்டியதில்லை. விருப்பப் பாடமாக வேண்டுமானால் பல்வேறு மொழிகளையும் வைக்கலாம். தமிழால் முடியாதவைகளை நிறைவேற்றித்தரும் முழு ஆற்றலும் ஆங்கிலம் ஒன்றுக்கு மட்டுமே இன்றைய நிலையில் இருப்பதால், அதனைக் கல்லூரியில் ஒவ்வொருவரும் கட்டாயம் கற்கும்படிச் செய்ய வேண்டும். இந்தி எந்தவிதத்திலும் தமிழர்க்குத் தேவையில்லை. அதுபோலவே ஆந்திரர்க்கும், கன்னடத்தார்க்கும், கேரளத்தார்க்கும் இந்தி தேவையில்லை. அவர்கள் தத்தம் தாய்மொழியோடு ஆங்கிலத்தைக் கற்றுக்கொண்டால் போதும்.

எனவே துவக்கப்பள்ளியிலிருந்து பல்கலைக்கழகம் வரையிலும் உள்ள எல்லாப் பாடங்களையும் தமிழ்மொழியிலேயே தமிழகத்தில் கற்பிப்பதற்கான எல்லா ஏற்பாடுகளையும் விரைவாகவும், உறுதியாகவும் செய்யவேண்டும்; தமிழோடு அகில உலகப் பொதுமொழியான ஆங்கிலத்தையும் ஏற்ற வகுப்புகளில், போதுமான அளவுக்குக் கற்பிக்கவேண்டும். இந்த இரண்டு மொழியை வைத்துக்கொண்டே தமிழர்கள் தங்கள் காலத்தை நன்றாக ஓட்டிச்செல்லலாம்; வேற்று மொழி உதவி எதுவும் தேவையில்லை.

தமிழ், தமிழகத்தில், பாடம் பயிற்றுவிக்கும் மொழியாக ஆகுக! தமிழர்கள் அனைவர் ஆதரவும் அதற்குக் கிட்டுக!

என்று எண்ணி தத்தம் இருப்பிடம் நோக்கிச் செல்வதும், மீண்டும் சூரியன் தோன்றும் போது வெளிக்கிளம்புவதுமான நிகழ்ச்சிகள் வேண்டுமானால் சிற்சில இடங்களில் நடை பெறலாமே ஒழிய வேறு மாறுதல் ஏதும் ஏற்பட்டுவிடாது என்றும் அவர் கூறியுள்ளார்.

எனவே கிரகணத்தின்போது மேற்கொள்ளும் மதச் சடங்குகள் மூடநம்பிக்கையின்பாற் பட்டவைகள் என்பதைத் தோழர் பாசு அவர்களின் தெளிவுரையின் மூலம் யாவரும் அறிந்துகொள்ளலாம்.

ஃ ஃ ஃ

அர்ச்சகரின் ஆர்வம்

ஆண்டவனுக்குப் பிரதிநிதிகளாகத் திருத்தலங்களில், திருக்கோயில்களில் வீற்றிருப்பவர்கள் அர்ச்சகர்கள் கூட்டமாகும். ஆண்டவனுக்கு ஏதாவது விண்ணப்பங்கள் போட வேண்டுமென்றால், ஆண்டவனின் அருளைப் பெறவேண்டுமென்றால், அல்லது ஆண்டவன் அருள் கொடுத்தால் அதைப் பெறவும் அர்ச்சகர்களின் அனுமதி முதலில் பெற்றாகவேண்டும். ஆண்டவர்களுக்குப் புரியும்படியான தேவமொழி அர்ச்சகர்களுக்குப் புரியும், ஆண்டவர்களை அழைக்கக்கூடிய பெயர்களும் பூசைமுறைகளும் அவர்களுக்குத்தான் தெரியும். மக்களின் வேண்டுகோள்களை மகேசனுக்கு அனுப்பவும், மகேசனின் கட்டளைகளை மக்களுக்குத் தரவும் இந்த அர்ச்சகர்கள் தேவையாயிருந்தனர். ஆலயங்களில் உலவும் இந்தத் திருமேனிகள்—ஆண்டவனின் பிரதிநிதிகளாக ஆண்டனர்; மக்கள் அவர்கள் முன் மண்டியிட்டு இருந்தனர்.

பரமண்டலத்திலிருக்கும் தேவதேவன்—அவருக்காகப் பாலாபிஷேகம் அர்ச்சகர்கையால் நடைபெறும். பரலோகத்தில் நல்லகதி அடைய, பரமபதத்தில் ஒரு இடம் கிடைக்க—ஒரு லட்சார்ச்சனை அதை நமது அர்ச்சகர்கள் தான் செய்யமுடியும். பரமாத்மாவின் பிரதிநிதி, பரமபதத்தின் வழிகாட்டி, பரலோகத் தபாலுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரி—இவ்வளவு மகத்தான பொறுப்புகளையும் வேலைகளையும் அர்ச்சகர்கள் செய்துவந்தனர், ஆண்டவனின் கட்டளைப்படி, வேதங்களின் வாக்குப்படி.

அர்ச்சகர்கள் ஆண்டனர், மக்களை மட்டுமல்ல, மன்னர்களையும் சேர்த்து. வேற்றுநாட்டின்மீது படையெடுக்கவேண்டுமானால், அர்ச்சகர் பிரசாதம் வழங்கினபின்தான் மன்னன் படையெடுப்பான். பட்டஞ் சூட்டவேண்டுமானால், பட்டாச்சாரியார் கையால் புண்ணிய தீர்த்தம் பெறவேண்டும். ஆலயத்தின் பிரதிநிதிகள், அரசர்களை ஆண்டிகளாக்கும் வலிமை பெற்றிருந்தனர், அரசுகளை மாற்றியமைக்கும் திறமையிருந்தது அவர்களிடம். அரசுகள் அழிந்திருக்கின்றன, அரசர்கள் ஓடியிருக்கின்றனர்; ஆலயங்கள் உயர்ந்தன, ஆலயங்களின் மான்யங்கள் குறைந்ததில்லை, அர்ச்சகர்களின் ஆதிக்கத்தை எதிர்ப்பார் எவருமில்லை. விண்ணின் பிரதிநிதி, அவனுக்கு மண்ணில் எதிர்ப்பு உண்டாக்க முடியுமா?

அவ்வளவு பலமும், பக்தியில் பதவியும் பெற்றவர்கள் அர்ச்சகர்கள். அந்தத் திருக்குலத்தவர்கள் அண்மையில் ஒரு மாநாடு கூட்டியிருக்கின்றனர். அர்ச்சகர்களின் மாநாடு என்றதும், பரலோக யாத்திரையைப்பற்றிய விவரங்கள், பூசைமுறைபற்றிய விவாதங்கள், தட்சிணை பற்றிய தாரதம்மியங்கள் இவைகளைப்பற்றிய ஆலோசனைகள் நிகழ்த்தியிருப்பார்கள் என்று எண்ணக்கூடும். ஆனால் இந்த அர்ச்சகர்கள் அப்படி ஒன்றும் செய்யவில்லை, பரலோகத்தைப்பற்றிய கவலையினால். அர்ச்சகர்களின் ஆதிக்கத்தை மக்கள் ஏற்றுக் கொண்டனர், ஆனால் மாநாட்டில் கூடிய அர்ச்சகர்களுக்கு இகலோகத்தைப்பற்றிய கவலைகள் உண்டாகியிருக்கின்றனர்.

13-6-55-ல் திருக்கழுக்குன்றத்தில் சாமிநாத குருக்கள் தலைமையில் நடைபெற்ற தென்னிந்திய அர்ச்சகர்கள் மாநாட்டில், "இனி வரப்போகும் பொதுத் தேர்தலிலாவது மேல் சட்டசபையில் ஆலயங்களுக்கும், அர்ச்சகருக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கவேண்டும்" என்ற தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளனர்.

ஆண்டவனின் பிரதிநிதிகள் மக்களின் பிரதிநிதிகள் அடங்கிய சபையில் இடம்பிடிக்க விரும்புகின்றனர். மகேசனின் மகிமை, மோட்சத்தின் வழி, பக்தியின் சிறப்பு என்று பரலோக காரியங்களை கவனிக்கவேண்டிய பூசுரர் கூட்டம், ஜனநாயகம், மக்கள் நலம் நாட்டு முன்னேற்றம் என்ற இகலோக வாழ்வில் அக்கரைவைத்து திட்டங்கள் தீட்டும் சட்டசபையில் பங்குபெற விழைகின்றனர். ஆண்டவனின் அருள்சீட்டு விற்கும் ஆண்டியார்கள் சட்டசபையில் நுழைவுச்சீட்டைக் கேட்கின்றனர். ஆண்டவன் இந்த அர்ச்சகர் கூட்டத்திற்கு அருள்புரிய, வசதிகள் செய்து

தார மறுத்துவிட்டாரா? அல்லது அர்ச்சகர்களுக்குத்தான் ஆண்டவனிடமிருந்த நம்பிக்கை போய்விட்டதா என்பது! தெரியவில்லை! மகேசன் சந்நிதானத்தில் இயலாத(!) எதை மக்கள் மன்றத்தின்முன் வைக்கப் போகிறார்களோ!

∴ ∴ ∴

காலம் மாறுகிறது

நமது நாட்டில் ஆண்டவன் பெயரால் கோயில்களிலும் மடங்களிலும் அளவிடற்கரிய பொருள்கள் பயனற்ற வழிகளிலே வீணுக்கப்பட்டு வருகின்றன. தேர் திருவிழாக்கள் என்றும், அபிஷேக ஆராதனைகள் என்றும் ஆண்டுதோறும் லட்சக்கணக்கான ரூபாய்கள் வீணே செலவழிக்கப்படுகின்றன. வைரத்தால் நாமம், நவரத்னங்களால் மணிமுடி, தங்க விமானம், வெள்ளித் தேர்—இப்படி அவ்வப்போது 'ஆண்டவனின் தேவை'களுக்குத் தக்கவாறு மக்களிடமிருந்து காணிக்கைகளைப் பெற்று மகேசன் உறைவிடத்தை மணி மாளிகையாக்கிவருகிகின்றனர். மண்ணாசை பொன்னாசை பெண்ணாசை—மாயப்பிசாசங்களாம். இம்மூன்றையும் கடந்தால்தான் ஆண்டவன் சந்நிதானத்திலே இடம் உண்டு என்று செபபுவர். ஆனால் ஆண்டவனுக்கே அத்தகைய ஆசைகளைக் காட்டிப் பூசைகள் செய்வர். இங்கு மான்யங்கள் இல்லாத கோயில் மடங்கள் கிடையாது. 1000 வேலிக்குமேல் நிலமுடைய தேவஸ்தானங்கள் பல இருக்கின்றன. ஆண்டுதோறும் அந்த மான்யங்களிலிருந்து கிடைக்கும் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள செல்வங்கள் மகேசனின் கோலாகல கற்பனை வாழ்விற்குச் செலவிடப்படுகிறதேயல்லாமல் மக்கள் முன்னேற்றத்திற்கு சிறிதும் பயன்படவில்லை. இப்படிப் பக்தியின் பெயரால் பாழாக்கப்படும் பொருள்களை, பாடசாலைகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சிக்கூடங்கள், மருத்துவ விடுதிகள் இன்னபிற முக்கிய வழிகளில் செலவழிக்கப்படவேண்டுமென்று நாம் கூறினால், மதக்குருமார்களும் பக்தகோடிகளும் பதைபதைத்து சீறிவிழும் காலம் போய்விட்டது. சீர்திருத்தக் கருத்துக்களின் உண்மையை கொஞ்சங் கொஞ்சமாக அவர்கள் இப்போது உணர்கிறார்கள். அவ்வப்போது நல்ல கருத்துக்களுக்கு ஆதரவுதரும் வகையிற்கூட பேசுகிறார்கள்.

"ஏராளமான பணம் செலவுசெய்து புதிது புதிதாக கோவில்கள் கட்டவேண்டிய அவசியமில்லை......கோவில் கட்டுவதற்குப் பதிலாக அப்பணத்தை கல்வி நிலையங்கள், வைத்திய சாலைகள் கட்ட உபயோகிப்பது பிரயோஜனகரமாயிருக்கும்."

இந்தக் கருத்துக்களை வெளியிட்டவர் சாமானியரல்ல. சைவச்சீலர், அருள்நெறிகண்டவர், குனறக்குடி அடிகளார் கூறுகிறார் புதிய ஆலயங்கள் தேவையில்லை யென்று. திருநெல்வேலி இந்துக் கல்லூரி நன்கொடையாளர் தினத்தில் கலந்துகொண்ட அடிகளாருக்கு இந்த அறிவுதயம் உண்டாகியிருக்கிறது. சிலநாட்களுக்கு முன்தான் தமிழில் அர்ச்சனை வேண்டும் என்று முழங்கினர். இப்போது ஆண்டவனுக்கு புதிதாக ஆலயங்கள் தேவையில்லை, பள்ளிகள் மருத்துவ விடுதிகள் கட்டவேண்டும் என்கிறார். 'என்ன, அடிகளார் இப்படி மாறிவிட்டாரே' என்று எண்ணத்தோன்றும் சிலருக்கு. உண்மையில் அடிகளார் மாறவில்லை. காலந்தான் அவரை மாற்றுகிறது. காலம் மாறுகிறதை உணர்கிறார் அதற்குத் தகுந்தாற்போல் வளைந்து கொடுக்கவேண்டிய இன்றியமையாமைக்கு அவர் கொண்டுவிடப்பட்டிருக்கிறார்.

காலம் மாறுகிறது என்பதற்கு மற்றொரு உதாரணம், அண்மையில் திருப்பதியில் கூடிய திருமலை தேவஸ்தான கமிட்டிக் கூட்டத்தில் திருப்பதியில் ஒரு மருத்துவக் கல்லூரி ஏறபடுத்த 50 லட்சம் நனகொடை தருவதென முடிவெடுத்திருப்பதாகும். திருமலையில் வீற்றிருக்கும் ஏழுமலையாண்டவன் தீராத வினைகளையெல்லாம் தீர்க்கவல்லான் எனறு பெயர்பெற்றவன். தற்போது ஏழுமலையானுக்கு நோய்களைக்கண்டு குணப்படுத்தும் ஆற்றல் போய்விட்டதோ என்னவோ, தேவஸ்தான அதிகாரிகள் மருத்துவக்கல்லூரியும் மருத்துவவிடுதியும் தேவை என்கின்றனர். மடங்கள் கோயில்கள் இவைகளின் சொத்துக்களை பொதுநலக் காரியங்களுக்காகச் செலவழிக்கவேண்டும் என்று இதுகாறும் திராவிட முன்னேற்றக் கழகம் கூறிவந்திருக்கிறது. இப்போதுதான் கொஞ்சங்கொஞ்சமாக பொதுநலக் காரியங்களுக்காக கோயில் வருமானத்தைப் பயன்படுத்த முன்வந்திருக்கின்றனர். திருப்பதியில் எற்பட்டுள்ள உணர்ச்சி மற்ற தேவஸ்தானங்களிலும் ஏற்படுமா?



(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

சகுந்தலா பேசுவதைச் சற்று நிறுத்தினாள். அவளுடைய குரல் நிதானமாக, வரண்டதாக —குற்றவாளிக்குக் கடுந்தண்டனை அளிக்கும் நீதிபதியின்குரலைப்போல இருந்தது, அவளுடைய மனச்சாட்சியில் அவளே குற்றவாளியாக நின்றுகொண்டிருந்தாள்.

பகலின் கடைசி ஒளிக்கதிர்கள் மங்கிக் கொண்டிருந்தன, ஒரு சிட்டு அறையினுள் நுழைந்து, பின் வெளியே பறந்து ஓடியது. குலசேகரன் பேசாமல் உட்கார்ந்திருந்தான்.

சகுந்தலா மீண்டும் தொடங்கினாள். "அதற்கப்புறம் நடந்தவை பெரும்பாலும் உங்களுக்குத் தெரிந்தவையே! ஆஸ்பத்திரியில் குழந்தை பிறந்தது குழந்தையை அனாதைச் சிறுவர் இல்லத்தில் சேர்த்துவிட்டு, நான் மட்டும் எங்கேயாவது போய்விடுவது என்று திட்டமிட்டேன். தாய், தந்தையற்ற—தந்தையின் பெயர் கூறமுடியாத குழந்தையின் எதிர்காலம் வேதனையாக இருக்குமென எனக்குத் தோன்றியது. ஆதலால் அனாதைச் சிறுவர் இல்லத்தின் சார்பாக, டாக்டர் சஞ்சீவியும், டாக்டர் தங்கமும் கேட்டபொழுது, குழந்தையைத் தரமறுத்தேன். எங்கேயாவது போய்விடுவது என்ற எண்ணத்துடன், கைக்குழந்தையுடன் வெளியேறினேன்.

வெளியில்—வேலை கேட்கப்போன இடங்களில் நான் பட்டபாடு, என்னையும் குழந்தையையும் அவர்கள் பார்த்த சந்தேகப் பார்வைகள்—கணவனற்ற ஒருத்தி கைக்குழந்தையுடன் வாழ்வது கடினம் என்பதைக் கண்டுகொண்டேன். கைக்குழந்தையைப் பார்க்கும்பொழுது காமுகன்மீது ஏற்பட்ட கோபமும், வெறுப்பும் அதன்மீது ஏற்பட்டன. உலகின் பழிச்சொற்கள், ஏளனப் பார்வை இவைகளிடமிருந்து விடுபட, உலகிலிருந்தே விடுபட்டுவிடுவதுதான் சரியென்று தோன்றியது, அந்த முடிவுடன், குழந்தையுடன் கடற்கரை நோக்கி நடந்தேன். கடற்கரையை அடுத்துள்ள நீண்ட சாலையை நான் கடந்து செல்லும்பொழுது, வலதுகைப்புறமாக ஒரு கார் மிக வேகமாக வந்துகொண்டிருந்தது. சாவு என்னை நோக்கி விரைந்து வருவதுபோலிருந்தது. நான் கீழே விழுந்தது, சாவுக்கு என்னை ஈடுவைத்து. நான் எதிர்பார்த்தபடி, கார் என்மீது ஏறிச்செல்லவில்லை. அருகில் வந்து நின்றுவிட்டது. காரை ஓட்டிவந்தவர்கள் டாக்டர் தங்கம்! என்னை, அழைத்துக்கொண்டு அவர்கள் சென்றார்கள்! பின் டாக்டர் சஞ்சீவியும், தங்கமும், அனாதைச் சிறுவர் இல்லத்தில் எனக்கு வேலை தந்தார்கள்."

சகுந்தலா சிறிதுநேரம் பேசாமலிருந்தாள். அவளுடைய நினைவுத்திரையில் காட்சிகள் மெதுவாகப் போய்க்கொண்டிருந்தன. "டாக்டர் சஞ்சீவியும், டாக்டர் தங்கமும் மற்றெல்லோரிடமிருந்து பெரிதும் வேறுபட்டிருந்தார்கள். அவர்கள் தங்களளவில் நல்லவர்கள் என்பது மட்டுமல்லாமல், மற்றவர்களையும் நல்லவர்களாகவே எண்ணி நடந்தனர். அதைத் தவிர அவர்களால் வேறு வகையில் எண்ணமுடியாது. அவர்களுடைய மனப்பாங்கு மற்றவர்களை நல்லவர்களாக ஆகும்படி தூண்டியது.

அவர்கள் பார்த்து எனக்கு அனாதைச் சிறுவர் இல்லத்தில் வேலை கொடுத்ததும், நான் அங்கு சென்றேன். சிறுவர்கள், குழந்தைகள் நடமாடும் இடம், சீற்றமும், பழிதூற்றலும் அற்ற இடம். அலைகடலில் சுருவுக்கும் சூறாவளிக்கும் அல்லற்பட்டு, கடைசியாக அமைதியானதொரு தீவில் ஓய்வெடுப்பது

போலிருந்தது, அந்த இல்லத்தில் இருந்தது. முதலில் நேர்ந்த களங்கத்தை மறந்தேன். அந்த இல்லத்தின் வளர்ச்சியில் ஈடுபட்டு வாழ்ந்தேன். அப்படியே அமைதி தொடர்ந்திருந்தால், நான் வெளியேறியிருக்கமாட்டேன் எனது குழந்தையும் இறந்திருக்காது.

அன்று அனாதைச் சிறுவர் இல்லத்தின் ஆண்டுவிழா நடந்தது. விழா முடிந்து, வந்தவர் சென்றுவிட்டனர், சிறுவர்கள் உறங்கிவிட்டனர். ஆரவாரம் ஓய்வடைந்தது. உறக்கம் பிடிக்காமல், நானமட்டும் தனியாகத் தோட்டத்தில் உட்கார்ந்திருந்தேன், விழாவைப் பற்றி எண்ணிக்கொண்டு, இல்லத்தின் எதிர்காலத்தைப் பற்றிக் கனவுகண்டு கொண்டு.

அப்பொழுது தலையில் துண்டைப்போட்டு மூடிக்கொண்டு, ஒருவன் தோட்டத்தினுள் வந்தான். தோட்டக்காரனாயிருக்கும் என்று நினைத்துக்கொண்டு, 'யாரது?' என்று அவனை அழைத்தேன். அவன் பேசாமல் அருகில் வந்து, 'நான்தான் சகுந்தலா!' என்று கூவினான்.

அந்தக்குரல்-பயங்கரமும் அதிர்ச்சியுமடைந்தேன்—முன்பு எங்களூர் மடத்தில் கேட்டிருக்கிறேன். அந்தக் காமுகன்—குமாரதாசர்—மீண்டும் வந்துவிட்டான்—"ஆ!" என்று கூச்சலிட்டுக்கொண்டு ஓடிவிட்டேன் என் அறைக்கு. நல்லவேளை அப்பொழுது தோட்டக்காரன் குடிசையிலிருந்து வெளிவந்தான். அதனால், காவியுடைதாங்கிய காமுகன் போய்விட்டான், மறுநாள் வந்து பார்ப்பதாகக் கூறிவிட்டு.

மறுநாள் வருவதாகச் சாமியார் சொன்னார் என்று தோட்டக்காரன் கூறியதும், இனி அங்கிருப்பது ஆபத்து என்று தோன்றியது. மறுநாள் காலை, பொழுது புலர்வதற்குமுன் அனாதைச் சிறுவர் இல்லத்தைவிட்டு வெளிக் கிளம்பினேன், அனாதையைப்போல.

பொழுது புலர்ந்தது, ஒளி பரவியது. ஆனால் என் உள்ளத்தில் சூழ்ந்த இருள் நீங்கவில்லை. இருளில் நடமாடுபவனைப்போல நான் போய்க்கொண்டிருந்தேன், எங்கு, எதற்காக என்ற கவலையின்றி! வேறு எங்கேயாவது மதுரை, திருநெல்வேலி போய்விடலாம் என்று தோன்றியது. கையில் கொஞ்சம் பணமும் இருந்தது. எங்கு போனாலும், என்னை விரட்டிவரும் காமுகன் வருவான் போலிருந்தது, ஆதலால் தற்கொலையைத் தவிர வேறு வழியில்லை யென்று தோன்றியது. சென்னையில் தற்கொலை என்றதும் கடற்கரைதான் எனக்கு ஞாபகம் வந்தது. இதற்குள், இரண்டு மூன்று நாட்களாக நல்ல கவனிப்பு இன்றி குழந்தைக்குக் காய்ச்சலும், பலவீனமும் இருந்தது. துன்பம், துயர் மிகுந்த உலகில் வாழ்வதைவிட உயிரை விட்டுவிடுவது நல்லது என்று தோன்றியது. சித்தங்கலங்கியவளைப்போலக் கடற்கரையை நோக்கி நடந்தேன். பின், நடந்தவை நள்ளிரவில் கண்ட கனவுபோல, நொடிப்பொழுதில் நடந்தன. உலகம், இருண்டுவந்தது, அலைகள் சுருண்டுவந்தன. என் முகத்தின்மீது அலையொன்று மோதி, உப்புக்கரித்தது. கையிலிருந்த குழந்தையைக் காணோம். திரும்பினேன், அதற்குள் மற்றொரு அலை என்னை மூடியது. பின் உணர்வு வந்தபொழுது ஆஸ்பத்திரியில் இருந்தேன்."

சகுந்தலா முடித்தாள். அறையில் அமைதி நிலவியது. குலசேகரன் அசைவற்று உட்கார்ந்திருந்தான். நீண்ட மழையும் புயலும் வீசி விடுபட்டதுபோலிருந்தது. புயலுக்குப் பின், மழைக்குப்பின், மண் சோகமாகக் காட்சியளிக்கும். அதைப்போல, சகுந்தலா தனது புயல்மிகுந்த கதையை முடித்ததும் சோகம் நிலவியது.

குலசேகரன் தன் பையில் கசங்கிக் கிடந்த கடிதத்தை எடுத்துச் சரிப்படுத்தி, சகுந்தலாவின் படுக்கைக்கருகில் இருந்த சிறு மேஜைமேல் வைத்தான். அந்த மெல்லிய இருட்டில், சகுந்தலாவின் கண்கள் தன்னை உற்றுப் பார்ப்பதை அவன் உணராமலில்லை. கடிதத்தை வைத்ததும், சிறிதுநேரம் அந்தப் படுக்கையினருகே நின்றான், எதாவது சொல்லவேண்டுமென்று அவனுக்குத் தோன்றியது. ஆனால் ஒன்றும் சொல்லமுடியவில்லை. பேசாமல், வெளியேறினான்.

தெருவில், விளக்குகள் வரிசையாகத் தொங்கின. காற்று சில்லென்று அடித்துக் கொண்டிருந்தது. குலசேகரனின் கார் விரைவாகப் போய்க்கொண்டிருந்தது. அவன் முகத்தில் தெளிவும், உறுதியும் காட்சியளித்தன.

அங்கு இருட்டில் சகுந்தலா உட்கார்ந்திருந்தாள். அவள் கண்களிலிருந்து வழிந்த கண்ணீர், கையிலிருந்த கடிதத்தின்மீது விழுந்து கொண்டிருந்தது, இருட்டில் எதுவும் படிக்க முடியாது, ஆனால் அந்தக் கடிதத்தில் இருப்பது அவள் உள்ளத்திற்கு நனறுகத் தெரிந்தது.

* * *

இரண்டு நாட்கள் கழித்து, தங்கம் வந்தபொழுது, சகுந்தலா போய்க் கதவைத் திறந்தாள்.

"நீங்களா?"

சகுந்தலாவின் கேள்வி தங்கத்திற்கு ஆச்சரியத்தைத் தந்தது. "ஏன்? நான் வருவேன் என்று தெரியாதா?"

"இல்லையில்லை! டாக்டர் வருவார் என்று நினைத்தேன்."

சகுந்தலாவின் உடல்நிலை நன்றாயிருந்தது. விரைவில் குணமடைந்தது குறித்து, தங்கம் மகிழ்ச்சியைத் தெரிவித்தாள். டாக்டர் தங்கம் மற்ற செய்திகளைப்பற்றி—வழக்கைப்பற்றி எதுவும் எடுக்கவில்லை — பேசிக்கொண்டிருந்தாள்.

"ஓ! நீங்கள் இரண்டுபேரும் பேசிக்கொண்டிருந்தீர்களா? அதுதான் ஒரே சத்தமாக இருந்தது!" என்று டாக்டர் சஞ்சீவி மாடிப்படியிலிருந்து கீழ் இறங்கினர்.

"டாக்டர் வீட்டில்தான் இருந்திருக்கிருர்?" என்று தங்கம் ஆச்சரியத்துடன் கேட்டாள். சகுந்தலா குழப்பமடைந்தாள், "அவர் வீட்டிலிருப்பதை மறந்துவிட்டேன்!" என்று சமாளித்துக்கொண்டாள்.

"வழக்கு எப்படி முடியும்?" காரில் போய்க்கொண்டிருக்கும்பொழுது டாக்டர் சஞ்சீவி, தங்கத்தைக் கேட்டார்.

"தெரியவில்லை."

"கமலநாதன் என்ன சொல்லுகிருர்?"

"வழக்கைப்பற்றி நான் குறிப்பாக ஒன்றும் கேட்பதில்லை. அவரும் அதிகம் சொல்வதில்லை. மற்றவர்களுடன் பேசும்பொழுது சொல்வதைத் தவிர, வழக்கைப்பற்றி என்னிடம் எதுவும் அவர் தெரிவிப்பதில்லை."

"உண்மையில், சகுந்தலாவிற்குத் திருமணமே ஆகவில்லையா?"

"என் கணவர் சொல்வதிலிருந்து, அவள் காதலித்தவனுடன் ஊரைவிட்டு ஓடிவந்தாளாம். பின் அவன் கைவிட்டுச் சென்றுனும். இதுதான் அவளூரைச் சேர்ந்த போலீஸ் தந்த குறிப்பு."

"பாவம்! அவளைப் பார்த்தால், குற்றங்குறை எதற்கும் இடமளிப்பவளாகத் தெரியவில்லை. உண்மை விவரத்தைக் கேட்கவேண்டும் என்று சிலசமயங்களில் எனக்குத் தோன்றும். ஆனல், ஏன் வீணுக அவள் மனதை வேதனையில் ஆழ்த்தவேண்டுமென்று இருந்துவிடுவேன்."

"இவளைத் தண்டிப்பதற்குப் பதில். இவளை அந்தக்கதியில் கைவிட்டுச் சென்றவனைப் பிடித்துத் தண்டித்தால், அதில் நீதியும் நேர்மையும் இருக்கும்."

தங்கம் சொன்னதைக் கேட்டு, டாக்டர் சஞ்சீவி சிரித்துக்கொண்டார்.

கோர்ட் ஆரம்பமானதும், சகுந்தலாமீது இருந்த வழக்கு முதலாவதாக எடுக்கப்பட்டது. சாட்சிகள் விசாரிக்கப்படும் கூண்டில், சகுந்தலா அமைதியாக உட்கார்ந்திருந்தாள். மெதுவாக அவள் பார்வை சுற்றிவந்தது. டாக்டர் சஞ்சீவி, டாக்டர் தங்கம் வெளியில் நின்று பேசிக்கொண்டிருந்தனர். குலசேகரன் கனமான புத்தகத்தைப் புரட்டி, பக்கத்திலிருந்த மற்ருெரு வழக்கறிஞரிடம் காட்டி, பேசிக்கொண்டிருந்தான். திரும்பிய அவன் பார்வை! சகுந்தலா தலையைத் தாழ்த்திக்கொண்டாள். "இன்றைய கேள்விகளுக்கு சகுந்தலா சமாளித்துக்கொள்ளவேண்டும்" என்று குலசேகரன் தனக்குள் சொல்லிக்கொண்டான்.

"அனதைச் சிறுவர் இல்லத்தை விட்டுக் கிளம்பியதும், இரண்டு நாட்களாக என்ன செய்தாய் என்று கூறமுடியவில்லை" என்று கமலநாதன் கூண்டின் அருகில் நின்று கேட்டான்.

"கூறமுடியவில்லை" சகுந்தலா சொன்னுள். உண்மையில் அவளுக்கு எதுவும் ஞாபகத்தில் இல்லை. இருட்டில் நடந்துசென்றல் தூரமும் நாழிகையும் ஒன்றும் தெரியாதுபோவதைப் போல, சகுந்தலாவின் அந்த நாட்கள் இருந்தன. ஆனல் சகுந்தலா கூறியதை கமலநாதன் ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. சரியான பதில் கொடுக்கமுடியாததால், அவள் அப்படிச் சொல்லுகிருள் என்று நினைத்தான்.

"சரி! கடற்கரைக்குப் போவதற்கு முன்னதாக நடந்தவைகளாவது ஞாபகம் இருக்கிறதா? கடற்கரைக்குப் போகும் பாதையில், வெற்றிலைப்பாக்குக் கடை வைத்திருக்கும் 2-வது சாட்சி ஆறுமுகத்தைப் பார்த்த ஞாபகம் இருக்கிறதா?"

"அந்த கடைக்காரரைப் பார்த்த ஞாபகம் இல்லை!"

"கடற்கரைக்கு ஏன் போனய்?"

சகுந்தலா பேசாமலிருந்தாள்.

" வாழ்க்கையில் வெறுப்பு வந்ததாக முதலில் ஒப்புக்கொண்டாயே! அந்த வெறுப்பில்தானே கடற்கரைப் பக்கம் போனாய்?"

" ஆமாம்!"

அத்துடன் கமலநாதன் உட்கார்ந்துகொண்டான். அதற்கு இரண்டு நாட்களாக அவன் கேட்ட கடுமையான கேள்விகளைப்போல அன்று இல்லை. அதிகம் கேள்வி கேட்கவும் அவன் விரும்பவில்லை. தற்கொலை செய்து கொள்ள அவள் தயாராயிருந்தாள், அதன் பேரில், கடற்கரைக்குச் சென்றாள். கைக்குழந்தையுடன் கடலில் விழுந்தாள். அந்த அளவு நிரூபித்தால் போதும் என்று அவன் விரும்பினான்.

அடுத்தபடி குலசேகரன் எழுந்து கேட்டான். " நீ கடற்கரைப் பக்கம் போன பொழுது, காற்று பலமாக அடித்துக்கொண்டிருந்ததல்லவா?"

" ஆமாம்!"

" காற்று தரையிலிருந்து கடலை நோக்கி அடித்திருக்கவேண்டும்!"

" ஆமாம்!"

" அப்படியானால், காற்றில் மண்ணும் புழுதியும் அடர்ந்திருக்கும்!

" இருந்தது."

" கடலலை உன்மீது பட்டபோது, குழந்தை கையில் இருந்ததா?"

" இல்லை."

" பின் குழந்தையை எங்கு பார்த்தாய்?"

" ஆஸ்பத்திரியில்! அது இறந்துவிட்டது!" தலையைக் குனிந்துகொண்டு, சகுந்தலா இருந்தாள். அவள் குரல் கம்மி, கண்களில் நீர்படர்ந்திருந்தது.

குலசேகரன் அத்துடன் நிறுத்திக்கொண்டான்.

மறுநாள் வாதப்பிரதிவாதங்கள் ஆரம்பிக்கும் என்று மாஜிஸ்ட்ரேட் கூறினார். அத்துடன் அந்த வழக்கு முடிவடைந்தது. கோர்ட் மற்றொரு வழக்கை விசாரிக்க முற்பட்டது. சகுந்தலா வெளியேறினாள்.

அன்று மாலை சகுந்தலா எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். யாரோ ஒரு சிறு பையன் வந்தான். கடிதமொன்றைக் கொண்டுவந்தான்.

" டாக்டர் சஞ்சீவி வீடு இதுதானே!"

" ஆமாம்! ஏன்?"

" வக்கீலையா, இந்தக் கடிதத்தை நேரில் கொடுத்துவரச் சொன்னார்!"

கடிதத்தைச் சகுந்தலா வாங்கிப் பார்த்தாள். அவள் பெயர் போடப்பட்டிருந்தது.

" சரி, போ!" என்று அவனை அனுப்பிவிட்டு, அவசரமாகக் கடிதத்தைப் பிரித்தாள்.
" அன்புள்ள..........,

கோர்ட் முடிந்ததும், நான் உன்னைப் பார்க்க வந்தேன். டாக்டர் சஞ்சீவியுடன் ஆஸ்பத்திரிக்குப் போயிருந்ததாகச் சொன்னார்கள். என்னுடைய கடிதத்துக்கு ஏன் பதில் தரவில்லை? இரண்டு நாட்களுக்குமுன் நான் கேட்ட பொழுது, அடுத்த கடிதத்துக்கு அவசியம் பதில் தருவதாகச் சொன்னாய்! ஆனால் அதன்படி எதுவும் வரவில்லை. இன்று காலை எதிர்பார்த்தபடி இருந்தேன். கோர்ட்டில் தான் உன்னைச் சந்திக்க—அல்ல பார்க்க முடிந்தது. சாட்சிக்கூண்டில் நீ—உன்னை கேள்வி கேட்க நான்! அப்பொழுது " நீ ஏன் என் கடிதத்துக்குப் பதில் தரவில்லை?" எனக் கேட்டுவிடலாமா என்று தோன்றியது.

கமலநாதனைப் பார்த்ததும் ஏன் அப்படிப் பயப்படுகிறாய்? எனக்கும் அவருக்கும் ஏற்பட்ட போட்டி இந்த வழக்கு! அதை ஒரு வகையில் நான் வரவேற்கிறேன். இந்த வழக்கு தானே நமக்கு ஒரு சந்தர்ப்பம் அளித்தது! இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவளை விடுவிக்கவேண்டும், அதற்குப் பலன் இவ்வளவு என்று எண்ணிக்கொண்டு நான் வாதாடவில்லை. உனக்காகவே தான் வாதாடுகிறேன்!

இன்று மாலை நான் ஓரிடத்துக்குப் போகிறேன். நாளைக் காலை, கோர்ட்டுக்குப் போகுமுன் சந்திக்கிறேன். உன்னுடைய நினைவுகள், தடுமாற்றங்கள், இவைகளை ஓரளவு என்னால் எதிர்பார்க்க முடிகிறது. ஆனால் முழுவதும் புரிந்துகொள்ள முடியவில்லை.

சேகர்.

* * *

கடிதத்தைத் தொடர்ந்து படிக்கும்பொழுது வரவர எழுத்துக்கள் மங்கிக்கொண்டிருந்தன. அவைகள் எழுத்துக்களாக இல்லை. வானத்தில் மின்னிடும் நட்சத்திரங்களாகப் பிரகாசித்

தன. நட்சத்திரங்களைப் போன்ற தூய்மை, உயர்வு அந்த எழுத்துக்களுக்கு இருந்தன. ஆனால் தான் அந்த எழுத்துக்களுக்கு—கடிதத்துக்கு உரிமைகொண்டாட அருகதை உடையவளா என்று தன்னைத்தானே சகுந்தலா கேட்டுக்கொண்டாள். குலசேகரன் சொல்வதற்கு மாறாக, அவருடைய எண்ணங்களைப்புரிந்துகொள்ள அவளால் முடியவில்லை. தனது கதையை முழுவதும் கேட்டபிறகும், அவரால் எப்படிக் கடிதம் எழுதமுடிகிறது? இரக்க உணர்ச்சியா? அல்லது......சகுந்தலாவால் விடைகாண முடியவில்லை. முன்னதாக, உள்ளம் அமைதியாக, களிப்புடனும், தூய்மையுடனும் இருந்த காலத்து, அவரைச் சந்தித்திருந்தால்......கையிலிருந்த கடிதம் கனமாக—தாங்கமுடியாத கனமாக இருந்தது. ஆனால் அதை வேண்டாமென்று போட்டுவிட முடியவில்லை. மூன்றாவது கடிதம்—முதலிரண்டு கடிதங்கள் இருந்த பெட்டியைத் திறந்தாள். அத்துடன் மூன்றாவது கடிதத்தை வைத்தாள்.

பதில் கடிதம் என்ன எழுதுவதென்று புரியவில்லை, ஒளிக்கதிர் இருட்டை நோக்கிப் போகிறது. ஆனால் இருள் ஒளிக்கதிர்களை நோக்கிப் போகமுடியாது. அதைப்போல, இருண்ட நெஞ்சினையுடைய அவளால் ஒளிக்கதிர்களுக்குப் பதில் தரமுடியவில்லை.

* * *

வழக்கைப்பற்றிக் கமலநாதனுக்கு எவ்விதக் குழப்பமும் இல்லை. சகுந்தலா புரிந்த குற்றம் மிகத்தெளிவாக இருந்தது. தனது வாதத்தை முடிக்கும்பொழுது அதை வலியுறுத்திக் கூறினான். "வழக்கில் சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளன. கைக்குழந்தையுடன்—அந்தக் குழந்தை எப்படிப் பிறந்தது என்பதைப் பற்றி நான் விரிவாகக் கூறவில்லை. குற்றம் நிகழ்ந்ததற்கு முக்கிய காரணங்களில் ஒன்றாக இருந்தபோதிலும், அதை அதிகம் விளக்கவில்லை. வழக்கைப் பொறுத்தவரையில் அந்தக் குழந்தை கல்யாணமாகாத எதிரிக்குப் பிறந்ததாகும் என்பதை நினைவில் வைத்துக்கொண்டால் போதும்—அந்தக் குழந்தையுடன் தற்கொலை செய்துகொள்ள எதிரி கடலில் வீழ்ந்திருக்கிறாள். குழந்தை இறந்துவிட்டது, அவள் சாவிலிருந்து தப்புவிக்கப்பட்டாள்.

தற்கொலைக்காரணத்தை எதிரியே ஒப்புக்கொண்டிருக்கிறாள். வாழ்க்கையில் வெறுப்பு! அந்த வெறுப்புக்கு முக்கிய காரணம் அந்தக் குழந்தையாகும்—அவளுடைய வாழ்க்கையின் ஒழுங்கீனம். கணவன் இறந்துவிட்டதாகக் கூறி, சிலரை சிலநாள் ஏமாற்றிவந்தாள், ஆனால் முடியவில்லை. அனாதைச் சிறுவர் இல்லத்திலிருந்தபொழுது, தான் ஒழுங்கானவள் என்றே எதிரி நடித்துவந்தாள். கடைசியாக ஏமாற்றுதல் வெளிப்பட்டுவிடும் என்ற அச்சத்தில் வெளியேறி, தற்கொலைக்குத் தயாராகிவிட்டாள்.

தற்கொலைக்கு முயன்றது, குழந்தையைக் கொன்றது இரண்டு குற்றச்சாட்டுகளும் எதிரி மீது இருக்கின்றன. குழந்தையைக் கொன்றது என்று கூறும்பொழுது, சகுந்தலா காதைப் பொத்திக்கொண்டாள். "இல்லை, இல்லை!" என்று முனகிக்கொண்டாள். யாரும் அதைக் கவனிக்கவில்லை,—தங்கம் குலசேகரன் இவர்களைத்தவிர.

கமலநாதன் குரல் சற்று உயர்ந்தது. "கடுமையான குற்றங்கள்! அவற்றுக்குத் தகுந்த தண்டனைகள் தரப்படவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறேன்! தண்டனைகள் ஒரு பெண்ணுக்குத் தரபபடுவதாக நாம் நினைக்கக்கூடாது! குற்றத்துக்குத் தண்டனை தரப்படுகிறது! எதிரி ஒரு பெண், இளம் பெண்! ஆனால் கொல்லப்பட்டது ஒரு குழந்தை, பச்சிளங் குழந்தை! அதை மறந்துவிடக்கூடாது! இத்தகைய குற்றங்கள் தயவுடன் பார்க்கப்பட்டால், சமூகத்தில் ஒழுக்கக்கேடுகள் அதிகரிப்பதுடன், அதை மறைக்கும் வகையில் இளங் குழந்தைகளின் திடீர்ச்சாவுகள் அதிகரிக்கும்!

குற்றச்சாட்டுகளை நிரூபிக்கப் போதுமான சாட்சியங்கள்—குற்றம் நிகழ்ந்ததற்கான காரணம்—இவை தெளிவாக வைக்கப்பட்டுள்ளன. இவற்றைச் சீர்தூக்கிக் கோர்ட்டார் தண்டனை அளிப்பார்கள் என்று கருதுகிறேன்."

கமலநாதன் உட்கார்ந்தான். தங்கம் அவனை உறுத்துப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

(தொடரும்)

'மன்றம்' சந்தா விபரம்

	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	6—0—0	7—8—0
ஆறு திங்கள் ..	3—0—0	
தனி இதழ் ..	0—4—0	0—5—0

பாலைவனம் சோலைவனம் ஆகுமா?

"பாலைவனம் சோலைவனம் ஆகுமா?" என்று கேட்டால், "ஆகும்!" என்று துணிவோடு, தெளிவோடு, உறுதியோடு விடைபகர ஒருவர் கிளம்பியிருக்கிறார்.

"ஒரு மனிதன் தன் உடலில் மூன்றில் ஒரு பகுதி தோலை இழந்துவிடுவானேயானால் அவன் இறந்துபடுகிறான். ஒரு மரம் மூன்றிலே ஒரு பகுதி பட்டையை இழக்குமேயானால், அது அழிந்துபடுகிறது. உலகம் தான் கொண்டிருக்கும் மரங்களில் மூன்றில் ஒரு பகுதியை இழக்குமேயானால், அது பாழ்பட்டுவிடும்" என்பது அவரது சிறப்புமொழியாகும்.

அவர்தான் **பார்ப்பு பேக்கர்** (Barbe Baker) என்ற ஆங்கிலேயர் ஆவார். அவருக்கு வயது 65. அவர் வட ஆப்பிரிக்காவிலுள்ள சகாரா பாலைவனத்தைச் சோலைவனம் ஆக்க முடியும் என்ற கருத்தை வெளியிட்டுள்ளார். அவர் ஒரு உலகப்புகழ்பெற்ற காட்டியல் வல்லுநர் (Forestry expert) "மரங்களின் மனிதர்கள்" (The Men of the Trees) என்ற பெயரமைந்த மரம் விரும்பிகளின் அமைப்பு ஒன்றை நிறுவி, அதனைச் சிறப்பாக நடத்திவருகிறார்.

சகாராப் பாலைவனம் மேலும் மேலும் வளராமல் தடுக்கவும், அதனைச் சிறிது சிறிதாகச் சோலைவனமாக ஆக்கவும் 'சகாரா மீட்புக்குழு' (Sahara Reclamation Company Limited) என்ற ஒரு நிறுவனத்தை ஏற்படுத்தியுள்ளார். இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அவர் ஏறத்தாழ நாற்பது நாடுகளின் ஒத்துழைப்பையும், பொருளுதவியையும் நாடியுள்ளார்.

பாலைவனத்தைச் சோலைவனமாக்குவது மிக்கப் பைத்தியக்காரத்தனம் என்று பலர் எள்ளி நகையாடுகிறார்கள். என்றாலும் அவர் தமது முதிர்ந்த வயதிலும் ஒரு பள்ளிச் சிறுவன்போல, உணர்ச்சியோடும் ஊக்கத்தோடும் உழைத்துவருகிறார். அவர் சென்ற நாற்பது ஆண்டு காலமாக அறிவியல் அறிஞர்களோடும், அரசாங்க அலுவலாளர்களோடும் போரிட்டுத், தம் கொள்கையை ஏற்குமாறு அவர்களை வற்புறுத்தி வந்துள்ளார். தோழர் பேக்கரின் சகாராக் கனவுகளில் சில இன்னும் சில ஆண்டுகளில் நிறைவேறக் கூடும் என்று இப்பொழுது அவர்களில் பெரும்பாலோர் ஒப்புக்கொண்டுள்ளனர்.

இன்றைய உலகைப் பெரிதும் அச்சுறுத்தி வருவது அணுக்குண்டோ, நீர்வளிக்குண்டோ அல்ல, பாலைவனப் பெருக்கந்தான் என்று தோழர் பேக்கர் எச்சரிக்கை விடுத்துள்ளார். உலகின் நிலப்பகுதியில் 10 இல் 3 பகுதி (3/10) பாலைவனமாகக் காட்சி அளிக்கின்றது என்று அவர் தெரிவிக்கிறார். காடுகளை அழித்து நாடாக்கிக்கொண்டுவரும் பழக்கந்தான், மனிதனால் உண்டாக்கப்படும் பாலைவனத்தின் அளவைப் பெருக்கிக்கொண்டிருப்பதாக அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

1850-ஆம் ஆண்டுவரையில், உலகில் பயிராகும் பகுதியில் ஆறில் ஒரு பங்கு (1/6) மனித முயற்சியால் பாலையாக்கப்பட்டது என்றும், 1850 இலிருந்து 1950 வரையிலுமுள்ள ஒரு நூறாண்டுகாலத்தில் மேற்கொண்டு பன்னிரண்டில் ஒரு பகுதி (1/12) பாலையாக்கப்பட்டிருக்கிறது என்றும் தோழர் பேக்கர் குறிப்பிடுகிறார்.

வட ஆப்பிரிக்காவின் நாகரிக வளர்ச்சி அதன் காடுகளோடு சேர்ந்து அழிந்துபட்டது என்னலாம் என்று அவர் கூறுகிறார்.

இன்றைய நிலையில் சகாராப் பாலைவனத்தை எடுத்துக்கொண்டால், அது ஐக்கிய அமெரிக்காவைவிட, ஆத்திரேலியாவைவிட பெரிதாகும். அது சுமார் 2000 மைல் நீளத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு 30 மைல் தொலைவுக்கு அகன்றுகொண்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது.

மரம் பயிராக்குதலை மிகப்படுத்துவதன் மூலமும், புதிய புதிய ஏரிகள்—ஆறுகள் ஆகியவற்றைக் காணுவதன் மூலமும் மட்டுமே உணவுப்பொருள் விளையும் பகுதியைப் பெருக்கமுடியும் என்று தோழர் பேக்கர் கூறுகிறார்.

அவர் 1952-ஆம் ஆண்டில், சகாராப் பாலைவனம் முழுவதும் விரிவாகச் சுற்றிப்பார்த்து ஆராய்ந்திருந்தபோது, சகாராப் பாலைவனத்தை மெல்ல மெல்ல சோலைவனம் ஆக்குவது இயலக்கூடிய ஒரு செயலே என்பதைக் கண்டார். அவர் அந்த ஆண்டில் சுமார்

000 மைல்கள் சுற்றிப் பார்த்து மரம் பயிராக்குவதற்கான திட்டத்தைத் தயாரித்தார்.

தோழர் பேக்கரும் அவரது நண்பர்களும் நூற்றுக்கணக்கான டன்கள் விதைகள் கொண்டுபோய் 'ஓயசீசு' என்னும் பாலைவன நீரூற்றுக்களுக்கு அருகில் அவற்றைவிதைத்தனர். அவை இப்பொழுது மரங்களாக வளர்ந்துள்ளன. மேகமண்டலத்தில் மரங்களால் வீசப்பட்ட குளிர்ந்த காற்று பட, சிறிதளவு மழை பொழிந்து ஆங்காங்கு நீரூற்றுக்கள் தோன்ற ஆரம்பித்திருக்கின்றன. ஒருகாலத்தில் மரங்கள் இருந்து, அவை பட்டுப்போகவே, குளிர்ந்த காற்று வீசுதல் குறைந்து, மழை பொழிதல் நின்று, காடு பாலைவனமாக மாறிவிட்டது என்பது தோழர் பேக்கரின் கருத்தாகும். சோலைகளின் அளவு பெரியபெரிய மழையும் பெருகுகிறது. மழை பெருகப்பெருக நீர் ஊற்றுக்கள் ஏற்படுகின்றன. நீர் ஊற்றுக்கள் ஏற்பட ஏற்பட மரம் பயிராகுதல் பெருகுகிறது. இப்படியாகப் பாலைவனத்தைச் சோலைவனமாக்கும் முயற்சியில் அவர் அரும்பாடுபட்டு வெற்றிகண்டு வருகிறார்.

தோழர் பார்ப்பு பேக்கர் உலகிற்கு ஆற்றியுள்ள தொண்டு அளப்பரிய தொண்டாகும். இன்றைய உலக நாகரிகம மரங்களை அழிப்பதற்குக் காரணமாக இருக்கிறதேயல்லாமல், மரங்களை வளர்ப்பதற்குக் காரணமாக இருக்கவில்லை. மரம் வளர்க்கும் உணர்ச்சியைப் பெரும்பாலோர் உள்ளத்தில் வளர்க்கத் தோழர் பேக்கர் பட்டபாடு கொஞ்சநஞ்சமல்ல.

பேக்கர் மட்டுமல்லாமல் அவரது பரம்பரையே மரம் வளர்ப்பதில் மிக்கப பற்று காட்டி வந்ததாகும். இங்கிலாந்தில் ஆம்சயர் (Hampshire) என்ற இடத்தில் அவரது குடும்பம் தலைமுறை தலைமுறையாக மரம் வளர்த்தலைப் போற்றிப் பாதுகாத்துவருகிறது. அவருடைய பாட்டனர் ரூ. 1,56,000 பெறுமான மரங்களை சுமார் 800 எக்கர் நிலத்தில் பயிராக்கி வளர்த்துவந்தாராம்.

பேக்கர் கேம்பிரிட்சு பல்கலைக் கழகத்தில் படித்த பிறகு, முதல் உலகப் பெரும்போரில் ஈடுபட்டிருந்தார். 1920-ஆம் ஆண்டில் காட்டியல் கல்வியியல் தெர்ச்சியுற்று அதற்கான சான்றுத்தாளும் பெற்றார். அவர் 1924-இல் "மரங்களின் மனிதர்கள்" என்ற பெயரமைந்த சங்கம் ஒன்றை நிறுவினர். அந்தச் சங்கத்தில் உறுப்பினராவோர் ஆண்டு ஒன்றுக்குக் குறைந்தது பத்து மரங்களையாவது உற்பத்தியாக்கவேண்டும். பேக்கரின் முயற்சியைப் பின்பற்றிய சுமார் 12,000 பேர்கள் ஓராண்டு காலத்தில் சுமார் 90,00,000 மரங்களைப் புதிதாகப் பயிராக்கியிருக்கின்றனர். அந்தச் சங்கத்தில் பிரிட்டனில் மட்டும் சுமார் 3000 பேர்கள் முக்கிய உறுப்பினர்களாகி யிருக்கின்றனர், அந்தச் சங்கத்திற்கு உறுப்பினர்கள் 44 நாடுகளில் பரவியிருக்கின்றனர்.

1930-ஆம் ஆண்டினை ஒட்டிய காலங்களில் அவர் நைசீரியாவிலும், பாலத்தீனத்திலும் காடுகளை உண்டாக்கும் பணியில் மிக மும்முரமாக ஈடுபட்டிருந்தார். பிறகு உலகம் முழுவதும் சுற்றி ஆங்காங்கு மரம் பயிராக்கவேண்டியதன் இன்றியமையாமை பற்றிச் சொற்பொழிவுகள் ஆற்றியும், ஏடுகளில் எழுதியும், ஒலிபரப்புகள் செய்தும் வந்தார். அவர் அமெரிக்கா, கனடா, ஆத்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளில் சுற்றுப்பயணம் செய்து மரம் வளர்க்கும் உணர்ச்சியை ஊட்டியும், காடுகள் உற்பத்தியாக்கவேண்டியதன் இன்றியமையாமையை உணர்த்தியும் அரும்பணி ஆற்றிவந்தார்.

அவர் வட அமெரிக்காவில் 17000 மைல்கள் சுற்றி, ஆங்காங்கு காடுகள் வளர்ப்பதற்கான திட்டங்களைத் தீட்டி, அமெரிக்கக் குடியரசுத் தலைவரிடம் கொடுத்தார். அமெரிக்காவின் சிற்சில பாலைவனப் பகுதிகளைச் சோலைவனமாக்க அந்தத் திட்டம் பெரிதும் பயனளிப்பதாக இருந்தது.

இப்பொழுது அவருக்கு வயது 66. என்றாலும் அவர் இன்னமும் சளைக்காமல் உழைத்து வருகிறார். சகாராப் பாலைவனத்தைப் பச்சைச் சோலைவனமாக்கும் பணியில்தான் இப்பொழுது அவர் ஈடுபட்டிருக்கிறார்; அதில் அவர் வெற்றிகண்டும் வருகிறார்.

காடு திருத்தி நாடாக்கும் காலம் ஒன்று இருந்தது, இப்பொழுது நாடு திருத்திக் காடாக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது!

சாமுவல் ஆனேமன்

ஓமியோபதி மருத்துவமுறை கண்டுபிடிக்கப்பட்டு இப்போது இரண்டு நூற்றுண்டுகள் முடிந்துவிட்டன. அதைக் கண்டுபிடித்தவர், சாமுவல் கிருத்தியன் பிரடெரிக் ஆனேமன் (Samuel Christian Friedrich Hahnemann) எனும் செர்மானியர் ஆவார்.

அவர் சாக்சனி மாகாணத்திலுள்ள மீசென் என்னும் நகரில் 1755-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10-ம் நாள் பிறந்தார். லீப்சிக், வியன்னு ஆகிய இரண்டு இடங்களிலும் மருத்துவப் பயிற்சிபெற்று 1789-ம் ஆண்டில் லீப்சிக் நகரில் குடியேறினர். அதற்கு அடுத்த ஆண்டில் அவர், மருந்துகளுக்காகப் பயன்படுத்தப்படும் பொருள்களின் குறிப்புகள் அடங்கிய (Materia Medica) ஒரு நூலை செர்மானியில் மொழிபெயர்த்துக்கொண்டிருக்கும்போது ஒரு உண்மையைக் கண்டுபிடித்தார். நல்ல நலமுள்ள உடலில் கொயினு எனும் மருந்து உண்டாக்கும் அறிகுறிகளும் நலங்குன்றிய உடலில் அதே மருந்து உண்டாக்கும் அறிகுறிகளும் ஒரே தன்மையினவாக ஒத்துக் காணப்பட்டன. இக்குறிப்பைக்கொண்டு ஒரு **மித்தவை விதி** (Law of Similars) என்ற உண்மையை உறுதிப்படுத்தினர். அதன்படி, நலமுள்ள, நலங்குன்றிய உடல்களில் ஒருமித்த அறிகுறிகளை உண்டாக்கும் மருந்துகளால், நோய்கள் குணப்படுத்தப்படுகின்றன. அதாவது ஒரு குறிப்பிட்ட நோயைக் குணப்படுத்த, அந்த நோயைத் தூண்டவல்ல மருந்துகளை உபயோகப்படுத்தவேண்டும் என்பதாகும். இந்தப் புதிய உண்மையை 1796-ம் ஆண்டில் ஒரு பத்திரிகையின்மூலம் வெளியிட்டுப் பரவச்செய்தார்.

அவர் தனது ஆராய்ச்சியைத் தொடர்ந்து மேற்கொண்டு நான்கு ஆண்டுக்குப் பின்னர் மற்றெரு உண்மையையுங் கண்டார். மருந்துகள் மிகக் குறைந்த அளவில் கொடுக்கப்பட்டால், நன்கு பயனளிக்கத்தக்க வகையில் குணப்படுத்தும் தன்மைகளை அம்மருந்துகள் வெளியிடுகின்றன என்று புதியதொரு சித்தாந்தத்தை வெளியிட்டார். அவர் தனது கண்டுபிடிப்பை ஓமியோபதி (Homoepathy) முறை என்று பெயரிட்டு, அதை விளக்கிக் கூறும்வகையில் 1810-ல் ஒரு நூல் எழுதினர். பலவகையான மருந்துகள் நலமுள்ள உடல்களில் ஏற்படுத்தும் வெவ்வேறுவகையான அறிகுறிகள் பற்றியும் ஒரு நூல் வெளியிட்டார்.

1821-ல் லீப்சிக் நகரின் மருந்து விற்பனையாளர்கள் சாமுவல் ஆனேமனுக்கு எதிராகக் கிளம்பவே அவர் அந்நகரைவிட்டு நீங்கவேண்டியதாயிற்று. கோட்டன் என்ற நகரில் வாழ்ந்த பிரபு ஒருவரின் அழைப்பின் பேரில் ஆனேமன் அங்கு சென்றுர். இதற்குப் பதினைன்கு ஆண்டுகளுக்குப் பின் பாரிஸ் நகருக்குச் சென்று தனது இறுதிக்காலம் வரையில் அங்கேயே தனது தொழிலை நடத்தினர். 1843-ம் ஆண்டு சூலைத் திங்கள் 2-ம் நாள் சாமுவல் ஆனேமன் இறந்தார். அவரது பணியைப் போற்றும் வகையில் 1851-ல் லீப்சிக்கிலும் 1855-ல் பாரிசிலும் அவருடைய உருவச்சிலைகள் எழுப்பப்பட்டன.

நகரசபைத் தேர்தல்

நகரசபைத் தேர்தலில் இரண்டு கட்சிகள் மும்முரமாகப் போட்டியிட்டன. வேலைத் திட்டம், குறிக்கோள்கள் என்று முதலில் ஆரம்பித்த தேர்தல் பிரசாரம், வரவர நேரிடையாக வசவுகளைப் பரிமாறிக்கொள்ளும் அளவு வளர்ந்தது. பிரசாரக்கூட்டங்கள் குழப்பமும், கலகமும் மிகுந்தனவாக மாறின. நிலைமை மோசமானதைக் கண்ட இரு கட்சிக்காரர்களும், சச்சரவுகளை நீக்குவதற்குச் சமாதானம் பேசவந்தனர்.

முதற்கட்சிக்காரர் : கலகமும் குழப்பமும் உண்டாக்கும் வகையில், வசவுகளையும் தூற்றுதலையும் இனிமேல் நம் தேர்தல் கூட்டங்களில் செய்யக்கூடாது.

இரண்டாவது கட்சிக்காரர் : சரியான யோசனை. கூட்டங்கள் அமைதியாக நடக்க வேண்டுமென்றுல் நீங்கள் எங்களைப்பற்றிப் பொய்களைச் சொல்லாதீர்கள்; நாங்கள் உங்களைப் பற்றிய உண்மைகளைச் சொல்லாதிருக்கிறோம்.

சொல்லத்தொடங்கினாள்— சொல்லவில்லை!

[எழினி]

நீண்டு உயர்ந்த பெரிய மலை. தொலைவில் நின்று காண்போர்க்கு அது நீலநிறமாகக் காட்சியளிக்கிறது. அதன் உச்சியிடத்தில் கருமுகிற்கூட்டங்கள் எப்பொழுதும் தவழ்ந்து கிடக்கின்றன. அதன் சாரலிலே மழை ஓயாமல் பெய்துகொண்டேயிருக்கிறது. மலையுச்சியிலும் சாரலிலும் பெய்யும் மழைநீர் ஒன்றுதிரண்டு பேரருவியாக மலையினின்றும் இழிந்துவருகின்றது. நீலக்கடலில் வெள்ளிய அலை காணப்படுவதைப்போல, நீல மலையிலிருந்து வெள்ளிய அருவி இழிந்துவரும் தோற்றம் காட்சியளிக்கிறது. அந்த அருவி பிறகு அகன்று அடர்ந்த பெரிய காட்டினுள் ஆறாக நுழைந்து செல்கிறது. ஆற்றையொட்டி ஆங்கோர் கண்ணுக்கினிய இயற்கைக் காட்சிகள் செறிந்த இடம். அந்த இடத்தைத்தான் காதலன் தன் அருமைக் காதலியைத் தனியாகக் காண்பதற்கு ஏற்ற இடமாகத் தேர்ந்தெடுத்திருக்கிறான்.

அவனும் அவளும் எப்படியோ ஒருவர்மீது ஒருவர் காதல்கொண்டுவிடுகிறார்கள். அவளுக்குப் பெற்றோர்களின் காவல் கட்டுப்பாடு பெரிதும் இடையூறாக நிற்பதால் இரவு நேரத்தில் காதலனை எதிர்ப்பட இயலவில்லை. பகற்பொழுதில் வேண்டுமானால் காண முயலுகிறேன் என்று காதலி தூதுவரின் மூலம் காதலனுக்குச் சொல்லியனுப்புகிறாள். அதற்கேற்பதான் காதலன் ஆள் நடமாட்டம் இல்லாத காட்டிடத்தைப் பகற்குறியிடமாகக் கொள்கிறான்.

தலைவனும் தலைவியும் அந்த இடத்தில் நாள்தோறும் எதிர்ப்படுகின்றனர். தம் கருத்துக்களையும், காதலின்பத்தையும் பரிமாறிக்கொண்டு களவொழுக்கத்தை இனிதே நடத்திவருகின்றனர். ஊரார்க்கு அஞ்சிப், பெற்றோர்களுக்கு அஞ்சிக் களவொழுக்கம் நடத்துவதிலுள்ள தொல்லைகளைப் போக்கிக்கொள்ள, விரைவில் திருமணம் செய்துகொள்ளும்படியாகத், தலைவி, தலைவனை வற்புறுத்துகிறாள். தலைவன் களவொழுக்கத்தில் பெறும் இன்பத்தை அவ்வளவு விரைவில் விட்டுவிட மனமில்லாமல், அதனை நீட்டிப்பதிலே, விருப்பஞ்செலுத்தி, திருமணத்தைக் காலந்தாழ்த்துவதற்கான சாக்குபோக்குகளைச் சொல்லிவருகிறான்.

ஒருநாள் தலைவனைக்காணும் விருப்போடு தலைவி பகற்குறியிடத்தை நோக்கி வருகிறாள். தலைவனை எதிர்பார்த்து அந்த இடத்தில் காத்திருக்கிறாள். நீண்டபொழுதாகியும் தலைவன் வரவில்லை. காதலனின் வரவு நோக்கிச் சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டேயிருக்கிறாள். பொழுது ஏறஏற திகிலும் திகைப்பும் ஏற்படுகின்றன. தலைவனோடு கூடிக்கலந்து ஓடிவிளையாடி மகிழ்ந்திருந்த இடத்தைக் காணும்போதெல்லாம் அவளுக்குப் பழைய நினைவுகள் வந்து அவளை மிக்க வருத்தத்தில் ஆழ்த்துகின்றன. தலைவனைக் காணாத ஏமாற்றத்தால் அழுதுகொண்டிருக்கிறாள்.

தலைவியின் பெற்றோர்கள் மகள் எங்கேயோ தோழிமார்களோடு விளையாடப் போயிருக்கிறாள் என்று எண்ணிக்கொண்டிருக்கின்றனர். பொழுது சாயும் முன்னே எப்பொழுதும் வீடுதிரும்பிவிடுகிற பெண், பொழுது போன பிறகும் வரவில்லையே என்று எண்ணிக் கவலைகொள்கின்றனர். மகளைத் தேடுவதற்காகத் தாய் புறப்பட்டுப்போகிறாள். மகளின் தோழிமார்களைப் பார்த்துத் தன்மகள் எங்கே என்று தாய் வினவுகிறாள். அவள் காட்டின் பக்கம் சென்றாள் என்று அவர்கள் கூறுகிறார்கள். தாய் காட்டுக்குள் நுழைந்து மகளைத் தேடுகிறாள். அங்கு ஆற்றங்கரைதனில் மரத்தடியில், உட்கார்ந்துகொண்டு தன் மகள் அழுது

கொண்டிருப்பதைத் தாய் காண்கிறாள். ஓடோடிப்போய் மகளைக் கட்டித் தழுவிக்கொண்டு "ஏன் கண்ணே இங்கு வந்தாய்? ஏன் அழுகிறாய்? எதையாவது அல்லது யாரையாவது கண்டு அஞ்சினாயா?" என்று கேட்டுக்கொண்டே, அவளது கண்களைத் தாய் துடைத்துவிடுகிறாள்.

தலைவி மேலும் மேலும் தேம்பி அழுகிறாள். "ஏன் அழுகிறாய்? அழாதே கண்ணு! எங்கே என்னைப்பார்த்து ஒரு சிரிப்பு சிரி பார்க்கலாம்! என் கண்மணியே! நீ அழுவதற்குக் காரணம் என்ன என்பதைச் சொல்லு!" என்று தாய் மகளைத் தேற்றுகிறாள்.

தலைவி தன்னைத் தேற்றுபவள் தாய் என்பதைச் சற்றே மறந்துவிட்டுத் தோழி என்ற நினைவில், நாணத்தையும் சிறிது மறந்துவிட்டு, "அந்த மலைநாடன் என் மார்பைவிட்டுப் பிரிந்துபோய்விட்டான்; அதனால் எனக்கு வருத்தம்; ஆகவேதான் அழுதேன்!" என்று சொல்லுவதற்கு வாயெடுத்துத் திரும்பிப் பார்க்கும்போது தாய் அருகிலே நிற்பதை அறிந்து, உடனே அந்தப் பேச்சை மாற்றி "அந்த மலைநாட்டிலிருந்து விலங்கு ஒன்று துரத்திக்கொண்டுவந்தது; அந்த அச்சத்தால்தான் அழுதுகொண்டிருக்கிறேன்!" என்று கூறிச் சமாளித்துக்கொள்கிறாள். பிறகு தாய் தலைவியை வீட்டிற்கு அழைத்துக் கொண்டு செல்கிறாள்.

அந்தக் காட்டிற்கு அருகிலுள்ள மலைநாட்டில்தான் தலைவன் வாழ்ந்துவருகிறான். அந்த மலைநாடு வளப்பம் மிகுதியாகப் படைத்தது. மலைச்சாரலிலுள்ள காந்தள் பூக்களிலுள்ள தேனை உண்டு வண்டுகள் யாழிசைபோல் எப்பொழுதும் இசைபாடிக்கொண்டே இருக்கும். அப்படிப்பட்ட மலைக்கு உரிமையுடையவனாகத் தலைவன் விளங்கும் காரணத்தால்தான், "அந்த மலைநாடன்" என்று தாய்க்குச் சுட்டிக்காட்ட இருந்த தலைவி, "அந்த மலைநாட்டு விலங்கு" என்று, தன் உள்ளக்கருத்தை மறைப்பதற்காக மாற்றிக் கூறினாள் தாயிடம்.

தலைவன், தன்னை ஏமாற்றிவிட்டான் என்ற வருத்தத்தினால், தலைவி அவனை மீண்டும் பகற்குறியிடத்திற்குச் சென்று காணவேண்டும் என்று எண்ணாமல், வீட்டிலேயே தங்கிவிடுகிறாள். பகற்குறி இடத்திற்குத் தலைவி இனி வரமாட்டாள் என்பதை உணர்ந்துகொண்ட தலைவன், அவளை அவள் வீட்டிற்கு அருகில் சென்று பார்க்கலாம் என்ற எண்ணத்துடன் தலைவன் வருகிறான். தலைவியும் தோழியும் வீட்டிற்குப் புறத்தே உள்ள தோட்டத்தில் உட்கார்ந்து உரையாடிக்கொண்டிருக்கிறார்கள். தலைவன் ஒரு மரத்தின் மறைவில் வந்து ஒளிந்துகொண்டு நிற்பதைக் கண்டுவிட்ட தலைவி, அவனைக் காணாததைப்போல தோழியோடு பேசிக்கொண்டிருக்கிறாள். தலைவனின் காதில் விழவேண்டும் என்ற எண்ணத்தில் தன் பேச்சைத் தலைவி திருப்புகிறாள்.

தலைவி : ஏடி! நான் அன்று காட்டிற்குப் போயிருந்தபோது என்ன நடந்தது என்று உனக்குத் தெரியுமாடி?

தோழி : ஆமாடி! அதைப்பற்றிதானே உன்னிடம் கேட்கவேண்டும் என்று நினைத்தேன்! நான் இதுவரையில் மறந்தே போய்விட்டேன்! என்னடி நடந்தது?

தலைவி : எனது அம்மா நான் அவருக்காகக் காத்திருந்த இடத்துக்கே வந்துவிட்டார்கள்!

தோழி : நீண்ட நேரமாகியும் உன்னைக் காணாததால், நீ எங்கே போயிருக்கக்கூடும் என்று உனது அம்மா எங்களைக் கேட்டார்கள். நீ வராதது எங்களுக்கும் கவலையாக இருந்ததால், உன்னைத்தேடி அழைத்து வரட்டும் என்று கருதி, நாங்கள்தான் அவர்களை அந்தக் காட்டிற்குள் அனுப்பி வைத்தோம்.

தலைவி : அவர்கள் வந்தது எனக்கு எவ்வளவு தொல்லையாய்ப் போய்விட்டதடி தெரியுமா?

தோழி : அம்மா உன்னையும் காதலரையும் பார்த்துவிட்டார்களா?

தலைவி : நல்லவேளையாக அவரை அவர்கள் பார்க்கவில்லை; என்னை மட்டுந்தான் பார்த்தார்கள்!

தோழி : ஏன், அவர் அம்மாவைக் கண்டவுடன் ஓடிவிட்டாரா?

தலைவி : இல்லையடி! அவர் அன்று வரவேயில்லை! வந்துவிடுவார், வந்துவிடுவார் என்று அவரை எதிர்பார்த்துக் கொண்டே நான் இருந்ததால்தான், பொழுது போனதை எண்ணிப்பார்க்காமல் இருந்துவிட்டேன்!

தோழி : அம்மா வந்து உன்னைச் சினந்து கொண்டார்களா?

தலைவி : அம்மா வந்து என்னைக் கட்டிப்பிடித்து என் கண்ணைத் துடைத்து "ஏன் அழு

கிருய்?" என்று கேட்டார்கள். நான் நீதான் வந்து கட்டிப்பிடித்துக்கொண்டு கேட்கிருய் என்று நினைத்துக்கொண்டு, உயிரைவிட சிறந்ததான நாணத்தையும் விட்டு "மலைநாடன் என்மார்பைவிட்டுப் பிரிந்ததாலே, வருத்தமுற்று அழுது கொண்டிருக்கிறேன்!" என்று சொல்ல வாயெடுத்துத் திரும்பிப் பார்த்தபோது, தாயைக் கண்டேன். உடனே என்பேச்சை மாற்றி, "மலைநாட்டு விலங்குக்காக அஞ்சி அழுகிறேன்!" என்று கூறினேன்.

: அம்மா அதுகேட்டு ஒன்றும் சொல்ல வில்லையா?

: அவர்கள் என்ன சொல்லமுடியும்? என்னைத் தேற்றி அழைத்துக்கொண்டு வீடுவந்து சேர்ந்தார்கள்!

: பிறகு எப்பொழுதாவது தலைவரைப் பார்த்தாயா?

: இவ்வளவு தொல்லைகளையும் எவ்வளவு நாட்களுக்கு நான் தாங்கிக்கொண்டு, அவரைப் பகற்குறியிடத்தில் கண்டுகொண்டிருப்பது? அவர் திருமணம் செய்து கொள்ளும் முடிவோடு வந்தாலொழிய அவரை, இனி, நான் பகற்குறியிடத்தில் காணப்போவதில்லை!

தலைவியின் உரையாடலைக் கேட்டுக்கொண்டிருந்த தலைவன், தலைவியின் உள்ளக்கிடக்கையை அறிந்து, திருமணத்தின் மூலம் அவளை அடைவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுகிறான்!

ஃ ஃ ஃ

நற்றிணை 17-ஆம் செய்யுள். இச்செய்யுளில் கண்டுள்ள கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு தீட்டப்பட்டதே மேலே காணும் காதற்காட்சியாகும். இச்செய்யுளை இயற்றிய புலவர் நொச்சி நியமங்கிழார் ஆவார். இவர் நொச்சிநியமம் என்ற ஊரைச் சேர்ந்தவர். வேளாண்குடியில் தோன்றியவர் என்று தெரியவருகிறது. இவர் நற்றிணையில் மூன்றும், அகநானூற்றில் ஒன்றும், புறநானூற்றில் ஒன்றும் ஆக ஐந்து பாடல்கள் பாடியுள்ளார்.

ஃ ஃ ஃ

நாள்மழை தலைஇய நன்னெடுங் குன்றத்து
மால்கடல் திரையின் இழிதரும் அருவி
அகலிருங் கானத்(து) அல்கணி நோக்கித்
தாங்கவும் தகைவரை நில்லா நீர்சுழல்
பேந்தெழில் மழைக்கண் கலுழ்தலின் அன்னை
எவன்செய் தனையோநின் இலங்கெயி(று) உண்கெனு
மெல்லிய இனிய கூறலின் வல்விரைந்(து)
உயிரினும் சிறந்த நாணும் நனிமறந்(து)
உரைக்கலுய்ந் தனனே தோழி சாரல்
காந்தள் ஊதிய மணிநிறத் தும்பி
தீந்தொடை நரம்பின் முரலும்
வான்றோய் வெற்பன் மார்பணங்(கு) எனவே

—நற்றிணை

[தோழி! நாண்மழை தலைஇய குன்றத்து, அருவி அல்கணிநோக்கித் தாங்கவும், தகை

வரைநில்லா மழைக்கண் கலுழ்தலின், அன்னை உண்கென இனிய கூறலின், நாணு நனிமறந்து வெற்பன் மார்பணங்கென உரைக்கலுய்ந்தனனே என்று கொண்டுகூட்டி முடிக்கவும்.

பொழிப்புரை : தோழி ! விடியற்காலையில் மழைபெய்துவிட்ட நல்ல நெடிய மலையினின்றும் கரிய கடலினலைபோல இழிகின்ற அருவி , அகன்ற பெரிய காட்டினிடத்துச்சென்று தங்கியோடும் அழகை நோக்கி, அது அவரைக் கண்டுபேசிய இடமாதலின் அடக்கவும் அடக்குமளவில் நில்லாமல், பெரிய அழகினையுடைய குளிர்ந்த கண்கள் நீரைப்பெருக்கி அழுதலானே, அதனைக் கண்ட அன்னை என்னை நோக்கி " நீ என் அழுகின்றனையோ ; இனி அழாதே ; நினது ஒளிவீசும் பற்கள் மகிழ்ச்சியைப் பெறுமாக " என்று மேன்மையான இனிய மொழிகளைக் கூறுதலானே நான் மிக விரைந்து உயிரைக் காட்டிலும் சிறந்த நாணத்தையும் மறந்துவிட்டு மலைச் சாரலிடத்திலுள்ள காந்தள் பூவின்தேனையுண்ட நீலமணி போலும் நிறத்தையுடைய வண்டு யாழிற் கட்டிய இனிய நரம்பு ஒலித்தல்போல ஒலிக்காநிற்கும் வானத்திலோங்கிய மலையையுடைய தலைவனது மார்பைப் பிரிந்தமையால் ஏற்பட்ட வருத்தத்திற்கு அழுதேன் என்று கூறத்தொடங்கி அப்பால் நினைவுவர அந்த நெருக்கடியிலிருந்து நீங்கிப் பிழைத்தேன்.

நாள்மழை - விடியற்காலம் பெய்யும்மழை ; தலைஇய-பெய்த ; அல்குஅணி-தங்கும் அழகு ; பேஎந்தெழில் - பெரியஅழகு ; கலுழ்தல் - அழுதல் ; எயிறு - பல் ; உய்ந்தனன் - பிழைத்தனன் ; தும்பி - வண்டு ; முரலும் - ஒலிக்கும்.]

களவொழுக்கத்தை நீட்டித்தலாகாது என்பது பெண்களின் விருப்பமாகவும், அதனை எவ்வளவுக்கெவ்வளவு நீட்டிக்கவேண்டுமோ அவ்வளவுக் கவ்வளவு நீட்டிக்கவேண்டும் என்பது ஆண்களின் விருப்பமாகவும் இருக்கும் என்ற உண்மை இச்செய்யுளால் நன்கு புலப்படுத்தப்படுகிறது.

காதலனின் பிரிவாற்றாமையால் வருந்துகிறேன் என்று சொல்ல தவறி வாயெடுத்த தலைவி, அதனைக் கூறாமல் தாயின் சினத்திற்கு ஆளாகாமல் தப்பித்துக்கொண்டாள் என்று கூறப்பட்டிருப்பது இனிமை தரும் நயம் ஆகும்.

நீலமலையினின்றும் அருவி இழிந்துவரும் தோற்றத்திற்கு, நீலக்கடலில் எழும்பும் அ யையும், வண்டின் ஓசைக்கு யாழின் இசை யும் உவமையாகக் கூறப்பட்டிருக்கின்றன.

பண்டைத் தமிழகத்தில் உயிரைக்கா லும் நாணத்தைச் சிறந்ததாகக் கருதி என்பது " உயிரினுஞ் சிறந்த நாண் " என் ருல் அறியலாம்.

காந்தள்பூவின் தேனை உண்டுவிட்டுத் த விருப்பம்போல் இசைபாடித் திரியும் வ போல், தலைவனும் தலைவியின் நலத்தையெ லாம் நுகர்ந்துவிட்டுத் தன் விருப்பம்போ திரிகிறான் என்பது உள்ளுறை உவமத்த பெறப்படும் கருத்தாகும்.

வானில் பூத்த நிலவு!

[அறிவுடை நம்பி]

நாள்தோறும் நாம் எவ்வளவோ பொருள் ளப் பார்க்கிறோம். பார்த்த அளவோடு மைந்துவிடுகிறோம். அவற்றைப் பற்றிய ந்த சிந்தனைக்கும் இடங்கொடுப்பதில்லை. ர்க்கின்ற பொருள்கள் அனைத்தைப் பற்றி நாம் கவலைப்பட்டுக்கொண்டிருப்பதில்லை. கண்ணில் பட்டுக் கருத்தில் படாத ாருள்கள் எவ்வளவோ காட்சியளிக்கின் ா!

எடுத்துக்காட்டாகத் திங்களை எடுத்துக் ாள்ளுவோம். களங்கமற்ற திறந்த வான ளியில், நல்ல இரவு வேளையில், ஒளி வீசித் தாங்கிக்கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். கள் எவ்வாறு வானத்தில் தொங்கிக் ாண்டிருக்கிறது, அதனைத் தொங்கவிட்டுக் ாண்டிருப்பது எது என்ற கேள்விகளைத் மைத்தாமே கேட்டுக்கொண்டு அவை க்கு விடைகாண முற்படுபவர்கள் எவ்வ பேர்கள் இருக்கப்போகிறார்கள்?

வானவெளியில் எவ்வளவோ கோள்கள் கங்கள்) திங்களைப் பெருமல் வாழ்கின்றன. ப்படிப்பட்ட கோளிலிருந்து உலகத்திற்குத் ரென்று யாரேனும் வந்துசேர்ந்தால், ள்ளித் தட்டு ஒன்று வானத்தில் மிதந்து ாண்டிருப்பதைக் கண்டு வியப்படைந்து வார். வானநூலறிவு அவருக்கு இல்லை று வைத்துக்கொண்டால், எப்படி வானத் அது நகர்ந்துகொண்டிருக்கிறது என் த எண்ணி எண்ணிப் பூரித்துப்போவார். ப்படிப் பூரித்துப்போகிற மக்கள் நமது நாட் இன்னமும் ஏராளமாக இருக்கவே செய்கி கள்.

இந்தக் கேள்விக்கான விடையைச் சுமார் நூறு ஆண்டுகளுக்குமுன்பு, அறிவியல் றிஞர் ஒருவர் தற்செயலாகக் கண்டுபிடித் . அவர்தான் சர் ஐசெக் நியூட்டன் என்ப ஆவார். நம்மை எந்த ஆற்றல், உலகத் தாங்கிக்கொண்டிருக்கிறதோ அதே ஆற் தான் திங்களை வானத்தில் தாங்கிக் ண்டிருக்கிறது: அதுதான் உலகின் ஈர்ப்பு vity) ஆகும்.

உலகின் சில தொலைவிற்கு மேலே ஈர்ப்பு ஆற்றல் அடியோடு அற்றுப்போய்விடுகிறது என்று பொதுவாகப் பலரும் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அது உண்மையல்ல. உலகின் ஈர்ப்பு ஆற்றல் மிகத் தொலைவிலுள்ள உடுக்கள் (நட்சத்திரங்கள்) வரையிலுங்கூடச் செல்லுகிறது. ஆனால் போகப்போக ஈர்ப்பாற்றல் வலிவிழக்கிறது. உலகை விட்டுக் கோடிக்கணக்கான மைல்களுக்கு அப்பால் ஒருவர் சென்று நின்றுபார்த்தால், அவ்விடத்தில் உலகின் ஈர்ப்பு ஆற்றல் மிகமிக அருகிப் போய்த்தானிருக்கும்.

ஈர்ப்புப் பற்றிய விதியைக் கண்டறிந்து முதன்முதல் உலகுக்கு அறிவித்தவர் சர் ஐசெக் நியூட்டன் ஆதலால், அந்த விதி நியூட்டனின் ஈர்ப்பு விதி (Newton's law of gravitation) என்று பெயர் பெறுவதாயிற்று. தொலைவு இரண்டுபங்கு ஆனால், ஈர்ப்பு ஆற்றல் கால்பங்கு அளவிற்கு வந்துசேருகிறது என்பது அவர் கண்டறிந்த விதியாகும். தொலைவு பத்துப்பங்கு அளவிற்குக் கூடப் போனால், ஈர்ப்பு நூற்றில் ஒருபங்கு அளவிற்குக் குறைந்துவிடுகிறது.

ஈர்ப்பு என்று சொல்லும்போது, நம்மை உலகத்தோடு சேர்த்துவைத்து எந்த ஆற்றல் இழுத்துப் பிடித்துக்கொண்டிருக்கிறதோ, அந்த ஆற்றலை மட்டுந்தான் நினைவுபடுத்திக் கொள்கிறோம். வானவெளியில் உலாவும் ஒவ்வொரு கோளும், ஒவ்வொரு பொருளும் அதனதற்கென்று தனித்தனியான ஈர்ப்பு ஆற்றலைக்கொண்டிருக்கின்றன. அளவையும், எடையையும் பொறுத்து ஈர்ப்பு ஆற்றல் ஒவ்வொரு கோளுக்கும் வேறுபடுகிறது. வியாழன் என்ற கோளை எடுத்துக்கொண்டால், அது உலகை விட மூன்றுமடங்கு மிகவான ஈர்ப்பாற்றலையுடையதாக விளங்குகிறது. திங்களை எடுத்துக்கொண்டால், அது உலகின் ஈர்ப்பாற்றலிலே ஆறிலே ஒருபங்கு ஆற்றலைத்தான் உடையதாக இருக்கிறது.

திங்களை எது தாங்கிக்கொண்டிருக்கிறது? என்ற கேள்விப்பக்கம் சற்றுத் திரும்பி விடை

காண முற்படுவோம். பல கோடிக்கணக்கான டன்கள் எடையுள்ள ஆற்றலைக்கொண்டு உலகமும் திங்களும் ஒன்றையொன்று எதிரெதிர் இழுத்துப் பிடித்துக்கொண்டிருக்கின்றன. திங்களுக்கு ஈர்ப்பு ஆற்றலும் இயக்கமும் இல்லை என்றால், திங்கள் உலகோடு மோதிச் சுக்குநூறாக உடைந்துபோயிருக்கும்.

திங்கள் கீழே விழுந்துவிடாதபடி உலகைச் சுற்றிவரக்கூடிய ஒருவகை இயக்கத்தைக் கொண்டிருக்கிறது. அது உலகைச் சுற்றி, ஒரு பெரிய வட்டத்தில், மணிக்கு 2000 மைல் வேகத்தில் சுற்றிவருகிறது (அது உலகை ஒருதடவை சுற்றி முடிக்கும்போது தன்னைத் தானேயும் ஒருதடவை சுற்றிக்கொள்கிறது). அந்த வேகத்தைக் குறைத்துக்கொள்ளாமல் இருக்கும் காலம் வரையிலும், திங்கள் இடம் விட்டுச் சரிவதற்கு வழியே யில்லை.

ஒரு கயிற்றின் முனையில் ஒரு கல்லைக் கட்டிவிட்டு, அதன் மற்றொரு முனையைப் பிடித்துக்கொண்டு, ஒருவர், தம்மைச்சுற்றி ஒரு வட்டத்தில் அந்தக்கல் சுழலும்படி சுழற்றினல், அப்படிச் சுழற்றுவதற்கு மிகக் குறைந்த முயற்சியே போதுமானது என்பதை ஒவ்வொருவரும் நன்கு அறிவார்கள். இந்த அடிப்படையில்தான் திங்களும் உலகைச் சுற்றிவருகிறது என்னலாம். சுற்றும்போது கயிறு கல்லை இழுத்துக்கொண்டிருப்பதைப்போல, திங்கள் சுழலும்போது உலகின் ஈர்ப்புஆற்றல்அதனை இழுத்துப் பிடித்துக்கொண்டிருக்கிறது.

சுருங்கச் சொன்னல், திங்களின் சுழலும் வேகம் அதனைக் கீழே விழாமல் காத்துக்கொள்கிறது; உலகின் ஈர்ப்பாற்றல் வான வெளியில் பறந்து போய்விடாதவாறு அதனைத் தடுத்துக்கொள்கிறது.

உலகத்திலிருந்து திங்கள் சற்றுத்தொலைவாக விலகவேண்டிய நிலை ஏற்பட்டாலும், வேகம் அதற்குத் தகுந்தாற்போல் சரிப்படுத்திக்கொள்ளப்படுகிறது. அதனல் ஒரு தவறும் ஏற்பட்டுவிடுவதில்லை. திங்கள் உலகைச் சுற்றி வட்டவடிவான சுவட்டில் ஓடவில்லை; ஏறத்தாழக் கோழிமுட்டைவடிவான சுவட்டில்தான் ஓடுகிறது. உலகிற்கு அருகிலும் சேய்மையிலும் மாறிமாறி வந்துபோகவேண்டிய நிலை திங்களுக்கு ஏற்பட்டாலும், கால அளவு சராசரியாகச் சரியாகிவிடுகிறது.

கயிற்றிலே கல்லைக் கட்டிவிட்டுச் சுழற்றும்போது, கயிற்றின் நீளம் குறைவாக இருந்தால் விரைவாகச் சுற்றுவதையும், கயிற்றின் நீளம் மிகவாக இருந்தால் மெதுவாகச் சுற்றுவதையும் பார்க்கிறோம். இந்த விதி கோள்களைச் சுற்றி வரும் திங்கள்களுக்கும், கதிரவனைச் சுற்றிவரும் கோள்களுக்கும் பொருந்தும். கதிரவனுக்கு அருகில் இருக்கும் சுக்கிரன் என்ற கோள் ஒரு நொடிக்கு (செகண்டிற்கு) 30 மைல் வேகத்தில் சுற்றுகிறது; ஆனல் மிகத் தொலைவிலுள்ள புளூட்டோ என்ற கோள் ஒரு நொடிக்கு 3 மைல் வேகத்தில்தான் சுற்றுகிறது. சில கோள்கள் பத்துப்பன்னிரண்டு திங்கள்களைக் கொண்டனவாக இருக்கின்றன. அவைகள் பல்வேறு தொலைவுகளில் நின்று பல்வேறுசுவடுகளில் சுற்றுகின்றன. உலகில் இருந்து சுமார் 2,50,000 மைலில் இருக்கும் திங்கள், சுமார் 200 மைல்களுக்குள்ளாகவே ஏற்பட்டிருக்கக் கூடாது என்று தடுக்கக்கூடிய இயற்கைவிதி ஏதுவும் இல்லை. அப்படி ஒரு திங்கள் ஏற்பட்டிருக்குமேயானல், இப்பொழுதுள்ள உலகை ஒரு மாதகாலத்தில் ஒருதடவை சுற்றுகிறது என்றல், அந்தத் திங்கள் ஒருமாதகாலத்தில் பத்துத்தடவைகள் சுற்றும். காரணம் உலகிற்கு அருகில் வரவர ஈர்ப்பாற்றல் மிகவாகக் காணப்படுவதேயாகும். அந்தத் திங்கள் மணி ஒன்றிற்கு சரியாக 18000 மைல் வேகத்தில் சுற்றும் என்று வைத்துக்கொண்டால், உலகைச் சுற்றிமுடிக்க அதற்கு $1\frac{1}{2}$ மணி நேரந்தான் பிடிக்கும்.

இதிலிருந்து பெறப்படுவது என்னவென்றல், உலகக் காற்றுமண்டலத்திற்கு மேலே மணி ஒன்றுக்கு 18000 மைல் வேகத்தில் நகரக்கூடிய பொருள் ஒன்றை வைத்தால் அது கீழே விழாது உலகோடு சேர்ந்து சுற்றிக்கொண்டேயிருக்கும். அதற்குப் பிறகு அந்தப் பொருளை நகர்த்த நெருப்பு தேவையில்லை, நீராவிப்பொறி தேவையில்லை, மின்பொறி தேவையில்லை, உலகின் ஈர்ப்பு ஆற்றலால் சுழன்றுகொண்டேயிருக்கும். அதனை மீண்டும் உலகிற்குக் கொண்டுவரவேண்டுமாயின் அதன் வேகத்தைக் குறைக்கப் பெருமுயற்சிகள் எடுத்துக்கொள்ளவேண்டும், வேகம் குறைந்தால் அது தானே உலகில் வந்து விழுந்துவிடும். காற்று மண்டலத்துக்கு அப்பால் வானவெளியில் காற்றேயில்லாததால், இயங்கும் பொருளைத் தடுக்கும் தடை ஏதும் இருக்காது. மேலும் அது ஓசையில்லாமல் இயங்கும்போது அது நகர்கிறது என்ற உணர்வேகூட இருக்காது. அது ஒரு படகு என்று வைத்துக்கொண்டால், அந்தப் படகும் அதனுள் உள்ள பொருள்களும் பளுவுடையனவாகத் தென்படமாட்டா.

வானவெளியில் பொருள்கள் எடையில்லாமல் இருக்கும் தன்மையை அறிவியல் அறிவு



(25)

ஞானதிருட்டியின்மூலம், புலோமசையை ்ரக்கன் தூக்கிச்செல்வதைப் பிருகு முனிவர் ர்த்தார். திரைப்படக் காட்சியில் வருவ தப்போல், அவருடைய அகக்கண்முன் லோமசைக் களவாடுபடலம் தெளிவாக்கப் ட்டது. ஆசிரமத்து வாயில். யாகக்குண் த்துமுன் புலோமசை உட்கார்ந்திருக்கிருள்; ஆகா! அவள் உட்கார்ந்திருப்பதே எவ்வளவு அழகாக இருக்கிறது. யாகக்குண்டத்தின் து உட்கார்ந்து தன் நீண்ட, அழகிய விரல் ளால் நெய்யை எடுத்து வார்க்கிருள், நெருப் ப் பற்றி வளராமல் புகைந்தபடி இருக்கிறது. டனே அந்த மயிலனையாள், எழுந்து ஓடி, யில் விசிறி ஒன்றை எடுத்துவந்து வீசுகிருள். ாகக்குண்டத்தில் தீ வளர்கிறது. அவளுடைய கம் தீயின் சிவந்த ஒளிபட்டு, இன்னும் வந்து காணப்படுகிறது. பாட்டொன்றை ணுமுணுத்துக்கொண்டு, அவள் விறகைப் பாட்டும் நெய்யைப் பெய்தும் யாகத்தீயை ளர்த்துவருகிருள்.

தனது மனைவி மிக அழகாக யாகத்தீயை வளர்த்துவருவதைக் கண்ட பிருகுமுனிவர் "ஆகா!" என்று உள்ளம் பூரித்தார். ஆனல் ஞான திருட்டியில் தொடர்ந்து வந்த மற்ருெரு காட்சி அவருக்குக் கோபத்தை உண்டாக்கி யது. புலோமசை தீயை வளர்க்கும்பொழுது, தீயில் மறைந்திருக்கும் ஓர் உருவம் ஞான திருட்டியில் தெரிந்தது. அதுதான் அக்னி தேவன! அவன் புலோமசையை மிகவும் வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான், அவ னுடைய அழகை மறைவாக இருந்து ரசித்துக் கொண்டிருந்தான்.

இந்தச் சமயத்தில்தான் புலோமன் என்ற அரக்கன் வந்தான், தனியே உட்கார்ந்திருக் கும் புலோமசையைக் கண்டான். உடனே அருகில் வந்து அவளைப் பற்றியிழுத்துத் தூக்கிக்கொண்டுபோனுன். இவ்வளவுக்கும், யாகக்குண்டத்தில் அக்னிதேவன் இருக் கிருன், இந்தக்காட்சியைப் பார்த்துக்கொண்டு. சாதாரணமாக தனியே இருக்கும் பெண்ணை, மாற்ருன் ஒருவன் வலுவில் கைப்பற்றிச் செல் வதைக் காணும் எவனும், கன்னியின் கற்

டைத்த ஒரு சிலரால்தான் உணர்ந்து காள்ளமுடியும். உலகைத் தவிர வேருெரு காளாலோ அல்லது பொருளாலோ அந்தப் -கு ஈர்க்கப்படும் என்று சொல்லுவதற் ல்லை. ஏனெனில் உலகின் ஈர்ப்பாற்றல் பல லட்சக்கணக்கான கோடிக்கணக்கான மைல் ருக்குச் சென்றிருக்கும் என்பதை முன்பே ணடோம். காற்றுமண்டலத்துக்குமேல் சுற்ற டப்படும் படகு உலகப்பரப்பின்மேல் இருக் ம்போது எவ்வளவு வலிவுடையதாக இருக் றதோ, அதே வலிவு அது வானவெளியில் ற்றும்போது பளு இருக்காது.

பளு பொதுவாக இரண்டுவகைப்படும். ஒரு கை ஈர்ப்பினல் ஏற்படும்; மற்ருெருவகை இயக்கத்தால் ஏற்படும். ஈர்ப்பாற்றல் கோளுக் குக்கோள் வேறுபடும். உலகில் சுமார் 180 பவுண்டு எடையுள்ள மனிதன், திங்களில் போய் நிற்பானேயானல் 30 பவுண்டு எடை தான் இருப்பான்; அவனே வியாழனில் போய் நிறபானேயானல் 480 பவுண்டு எடை இருபபான். வானவெளியில் சுற்றும் படகுக்கு ஈர்ப்பாற்றல் பளு இருக்காது, இயக்குவிக்கும் ஆற்றல்பளுதான் ஏற்படும்.

ஈர்ப்பு ஆற்றலால்தான் வானில் பூத்த நிலவு விழாமலிருக்கிறது; அண்டத்திலுள்ள அனைத்து உறுப்புகளும் விழாமலிருக்கின் றன.

பைச் சூறையாட நினைக்கும் காமுகனுடன் சண்டையிட்டு, பெண்ணை விடுவிக்க முயலுவான், இங்கு முரட்டுக் குணம் படைத்தவனிடம் சிக்கியுள்ள பெண்ணோ சாதாரணமானவளல்ல. பிரமனின் மருமகள் பிருகுமுனிவரின் அருமந்த மனைவி, அந்த ரிஷிபத்தினி அரக்கனொருவனால் கைப்பற்றப்படுவதைப் பார்த்ததும் அக்னி அலறித் துடித்தானா, "ஆரடா நீ?" என்று போராட எழுந்தானா? "பிருகு முனிவரின் பத்தினியையாக் கை பிடித்து இழுத்தாய், இதோ! பிடி சாபம்! எரிந்து சாம்பலாய்ப் போ!" என்று சாபமிட்டு அழித்தானா? அப்படி ஏதும் அக்னிதேவன் செய்யவில்லை. தனியாக இருந்த புலோமசையைப் பார்த்து ரசித்துக்கொண்டிருந்தது போல, அரக்கன் புலோமசையை வலுக்கொண்டு, தூக்கிச்செல்லும் கட்டத்தையும் பார்த்து, "ஆகா! ஆகா!" என்று ரசித்துக்கொண்டிருந்தான். அதற்குப் பின்தான், புலோமசையின் வயிற்றிலிருந்த குழந்தை வெளிவந்தது, அரக்கனை எரித்தது.

எதையும் எரித்துச் சாம்பலாக்கக்கூடிய அக்னி, அக்கிரமக்காரனை அழிக்காமல், வேடிக்கைபார்த்துக்கொண்டிருந்தான். ஏதுமறியாப் பச்சிளங்குழந்தை அந்த அரிய காரியத்தைச் செய்யவேண்டியிருந்தது. ஞானதிருட்டியின் மூலம் இந்தக் காட்சியைக் கண்டதும், பிருகு முனிவரின் கோபம் அதிகரித்தது. "அக்கிரமம் நடப்பதைக் கண்டும் தடைசெய்யாமலிருந்ததால், நீ சுத்தமான பொருள்களையன்றி, அசுத்தமான பொருள்களையும் தின்பாயாக!" என்று சாபம்கொடுத்தார். இந்தச் சபபத்தால் தான், அசுத்தமான பொருள்களை தீயில் போட்டு அழிக்கப்படுகிறதாம். அதைவிட, அசுத்தமான—பாழான பொருள்களை எரித்து விடுவதற்கு புராணம் தரும் கதை இதுவாகும்.

எட்டுத் திக்குக்களில், தென்கிழக்குப் பகுதியில்தான் அக்னியினுடைய தலைநகரம் இருக்கிறது. அக்னி சிவந்த மேனியனாய், மூன்று கால்கள், தலையில் நான்கு கொம்புகள், ஏழு நாக்குகள் இவைகளுடன், ஆட்டு வாகனத்தின் அமர்ந்து உலவிவருவான்.

வாயுதேவன்

காசிப முனிவருக்குப் பிறந்த பல மக்களுள், வாயு ஒருவன். இளமைப் பருவத்திலேயே, தவம் செய்யும் முறைகளைக் கற்றுக்கொடுத்து, காசிபர் அவனை அனுப்பினார். தந்தையின் கட்டளைப்படி, மகனும் பூலோகம் வந்து, தவம் செய்வதற்கு மிகப் புனிதமான இடம் எதுவென ஆராயும்பொழுது, கங்கைக்கரையில் உள்ள காசி ஒன்றே மிகச்சிறந்த இடம் என்று தெரிந்ததாம். அதன்படி, வாயு காசிக்குப் போய் தவம் செய்யத்தொடங்கினானாம். தவமென்றால், மிகக் கடுமையான தவம்! தவத்தின் காலமும் மிக நீண்டது! அத்தகைய தவத்தை நினைத்துப் பார்ப்பதற்குக்கூட கடினமாம்! காசிகாண்டம் என்ற புராணம் அந்தத் தவத்தைப் பற்றிக் கூறும்பொழுது "பாதி மதிவே ணியனிருதாள் பத்து நூறாயிரமாண்டு காதலோடு மினிதேத்திக் கருதரிய தவம்புரிந்தான்" என்று கூறுகிறது. அதாவது பாதி மதியைத் தலையிற்சூடிய சிவபெருமானின் இரண்டு அடிகளையும் மனதில் வைத்து, பத்துலட்சம் ஆண்டுகள் மிகுந்த ஆசையுடன் தொழுது, மற்றவரால் நினைக்க முடியாத தவத்தை அவன் செய்தான் என்பதாகும். எனவே புராணக் கணக்குப்படி வாயுதேவன் பத்துலட்சம் ஆண்டுகள் தவம் புரிந்திருக்கிறான். கடைசியில் சிவபெருமான் தோன்றி, அட்டதிக்குப் பாலகர்களில் ஒருவனாகவும் காற்றுக்கு அரசனாகவும் அவனை ஆக்கி, வடமேற்குத் திக்கை அவனுக்கு அளித்துவிட்டுச் சென்றார்.

பத்து லட்சம் ஆண்டுகள் தவம் செய்ததன் பலன், வாயு காற்றுக்கு அரசனாகவும், அட்டதிக்கில் ஒன்றுக்கு அதிபதியாகவும் ஆனான் தான். பதவி கிடைத்ததும், பழைய தவம் முதலியன மறைந்துவிட்டன. அக்னிதேவனைப்போல—அக்னிதேவனைவிட அதிக ஆர்வத்துடன் பெண்கள் இருக்குமிடங்களில் சுற்றிவந்தான். தீ மூட்டப்பட்டால்தான் அக்னிதேவன் அங்கு வரமுடியும், அல்லது வேறு வகையில் உருமாறிவரவேண்டும். ஆனால் காற்று உள்ள இடங்களிலெல்லாம் வாயுதேவன் மறைந்து இருக்கமுடியும். எனவே அக்னிதேவனைவிட, வாயுதேவனுக்கு சுற்றிவருவதற்கான வசதி அதிகமாக இருந்தது,

குசநாபன் என்ற அரசன் சௌசகி நதிக்கரையில் அரசாண்டுகொண்டிருந்தான். அவனுக்கு நூறு பெண்கள் பிறந்து, இளவரசிகளாக—அழகும், பண்பும் வாய்ந்தவர்களாக வளர்ந்துவந்தனர். அவர்கள் தம் தந்தையின் அரண்மனையை அடுத்தத் தோட்டத்தில் ஒருநாள் விளையாடிக்கொண்டிருந்தனர். பெண்கள்—அதிலும் நூறுபேர்கள்—நாட்டின் இளவரசிகள் விளையாடுகின்றனர் என்றால், தோட்டத்தில் எவ்வளவு ஆரவாரம்

ந்திருக்கும்? சோலையும் சாலையும் அவர்க டைய விளையாட்டால் நெருங்கிக்கிடந்தது. தச் சமயத்தில் வாயுதேவன் தோட்டத் உலவிவந்தான். பெண்கள் — இளம் ண்கள்—இளவரசிகள் — ஒவ்வொருவரை சுற்றிச்சுற்றி வாயுவந்தான், மலரைச்சுற்றி ம் வண்டைப்போல. ஆனால் மலரைத் ந்தெடுத்ததும், வண்டால் தேனுண்ண கிறது. ஆனால் பாவம் வாயுதேவனால்— ற்றிலே மறைந்துவந்த வாயுதேவனால் ர்களை அடையமுடியவில்லை. பெண்களோ ம் தனிமையில் இருப்பதாகக் கருதி, ஆடுவ , பாடுவதும், நீரில் வீழ்வதும், விளையாடுவ ாக, இருந்தனர். அவர்களைப் பார்க்கப் க்க, வாயுதேவனால் பொறுத்திருக்கமுடிய லை. எப்படியேனும் அவர்களை அடைய ண்டுமென்ற ஆவல் அதிகரித்தது. அவர் என்றால் அந்த நூறுபேரையும் தனக்கு மையாக்கிக்கொள்ள வேண்டுமென நினைத் ன். யாரைப்பார்த்தாலும் விலக்கிவிட த வாயுதேவனுக்கு விருப்பமில்லை. வே நூறுபேரையும் அடைவது என்று ன்றான். பத்துலட்சம் ஆண்டுகள் பரமனை க்கிப் பொறுமையாகத் தவம்செய்த வாயு, ம் பாவையர் சிலரைக்கண்ட ஒரு நாழி க்குள் பொறுமையிழந்தான். மன்மதனின் ணங்கள் அவ்வளவு கடுமையாக இருந்தன ! இதை வாயுதேவனே சொல்லிக்கொள் றான்.

சநாபன் மகளிர் நூற்றுவர்மீது இச்சை ண்ட வாயு, மறைந்திருப்பதை நீக்கி, தன் வத்தில் அவர்கள் எதிர்நின்றான். தேவ லைச் சேர்ந்தவனொருவன்—கண்ணிமைக் வன், கால் நிலத்தில் படாதவன், தங்கள் ட்டத்திற்குள் வந்திருப்பதைக் கண்ட கள், தங்கள் கோலாகலத்தை நிறுத்தி, னைச் சுற்றி வேடிக்கைபார்த்து நின்றனர். வாறு நின்ற பெண்களைப்பார்த்து—வாயு ன் சொல்லியதை கம்பர் எப்படிச் ல்லுகிறார் என்று பார்க்கலாம்.

"கொடித்தனி மகரங்கொண்டோன்
குனிசிலைச் சரத்தா னொந்தேன்
வடித்தடங் கண்ணீ ரின்றே
மணத்திரென் றுரைப்ப—"

து கௌசகி நதியின் வரலாற்றை இராம மணர்களுக்கு விசுவாமித்திரர் கூறும் து வருகிறது. கம்ப இராமாயணம் பாலகாண்டம் வேள்விப்படலத்திலுள்ள ஒரு பாடலின் முதலிரண்டு அடிகள்.

குசநாபன் குமரியர் நூற்றுவர் முன்நின்று வாயுதேவன் இந்த வேண்டுகோளை சமர்ப்பிக்கிறான். "தனது கொடியில் ஒப்புயர்வற்ற சுறாமீனின் உருவத்தை வைத்துள்ள மன்மதனின் கரும்பு வில்லிலிருந்து வருகிற மலர் அம்புகள் பட்டு நான் மிகவும் துன்பப்படுகிறேன். ஆதலால் இப்பொழுதே நீங்கள் எல்லோரும் மணந்துகொள்ளுங்கள்!"

சோலையில் இளம்பெண்கள் மலர்கொய்து கொண்டிருக்கிறார்களென்றால், அவர்களைக் கண்டு காமுற்ற வழிப்போக்கன், "மன்மத பாணம் என்னை மயக்கிவிட்டது, மங்கை நல்லோரே! காமபாணம் அருந்திடுவோம் வாரீர்" என்று அழைப்பு விடுப்பதுபோல, கௌசாம்பி இளவரசிகள் முன்போய், 'மாரனின் மலர்ச்சரத்தால் நொந்தேன, இன்றே என்னை மணந்துகொள்ளுங்கள்!" என்று கேட்டுக்கொள்ளுகிறான். மணந்துகொள்ள—அணைந்துகொள்ள விரும்புவது ஒருவர் இருவரையல்ல, அந்த நூறுபேர்களையும்!

காற்றுக்கு அரசன—எட்டுத் திக்குகளில் ஒன்றுக்குக் காவலன—அவன் விரும்பினால் தென்றல் அடிக்கும், கோபித்தால் புயல் வீசும்—அப்படிப்பட்ட வாயுதேவன் மானிடப் பெண்கள் முன் மண்டியிட்டு இருக்கிறான்! குசநாபன் மகளிர் திகைப்பும், வியப்பும் அடைந்தனர், தேவகுலத்தைச் சேர்ந்தோன், —தென்றலரசன் தங்களை விரும்புகிறானே யென்று. வாயுதேவனின் மூடாத கண்களோ, "இன்றே, இப்பொழுதே!" என்று கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகின்றன. அவனை மறுக்க அவர்கள் விரும்பவில்லை, ஆனால் அவன் விருப்பத்துக்கு அப்பொழுதே இணங்கவும் மறுத்தனர். காரணம் அவர்கள் தாய்தந்தையருக்குக் கட்டுப்பட்டவர்களாம். பெற்றோரின் கட்டளைப்படி கணவனை ஏற்கவேண்டும் என்ற கொள்கையுடையவர்களாம். ஆதலால் வாயுதேவனைப் பார்த்து, "தேவனே! உமது கருத்தை எமது தந்தையிடம் சொல்லி, அவருடைய சம்மதத்தைப் பெறுங்கள்! அவர் தாரைவார்த்து எங்களை உங்களுக்குக் கொடுத்தால் நாங்கள் உங்களை அணைவோம்!" என்று தீர்மானமாகச் சொன்னார்களாம்,

ஆரிய முறைப்படியும், வேத முறைப்படியும், திருமணத்தின்போது பெற்றோர்கள் பெண்ணைத் தாரைவார்த்துத் தருவார்கள். தாரை வார்த்துத் தருவது என்றால் தானமாகத்

தருவது என்று பொருள். தானந் தரும் பொழுதுதான், தானப்பொருளை வைத்து தாரைவார்த்து—அதாவது புண்ணிய தீர்த் தத்தை ஊற்றிக்கொடுப்பார்கள். அவர்க ளுடைய கருத்துப்படி, மாடு, கன்று, மண், பொன், மாங்காய், தேங்காய், இவைகளைப் போல பெண்களும் தானமாகத் தரப்படக் கூடிய—தரப்படவேண்டிய பொருள்களில் ஒன்று. ஆதலால்தான், இன்றும் திருமணத் திற்குக் கன்னிகாதானம்—கன்னிகையைத் தானம் தருவது—என்று சாஸ்திர சம்பிரதாய முறையில் இருப்பவர்கள் பெயரிடுகிறார்கள். அந்த முறையில், தாரைவார்த்துக் கொடுத்த தும், பெண்ணை மாப்பிள்ளைக்குத் தானமாகக் கொடுத்ததாக அர்த்தம். அதனால்தான், குச நாபனின் குமரியர், "எம் தந்தை தாரைவார்த் துத் தந்தால் உமக்கு நாங்கள் இணங்கு வோம்!" என்று சொல்லுகிறார்கள்.

வேத சாஸ்திர முறைகளின்படி, தந்தை சொல்லியபடிதான் பெண்கள் கணவனை ஏற் றுக்கொள்ளவேண்டும். ஆதலால், குசநாபன் பெண்கள் சொல்லியதை சரியென்று ஒத்துக் கொண்டு, வாயுதேவன் குசநாபனிடம் சென்று தனது வீரதீர ப்ராக்கிரமங்களைச் சொல்லி, பெண்களைத் தாரைவார்த்துப் பெற்றிருக்க லாம். தேவலோகத்தைச் சேர்ந்த அவருக் குப், பெண்களைப் பார்த்தவுடன் பொறுமை இல்லாமற்போய்விட்டது. "இன்றே, இப் பொழுதே என்னை மணந்திடுங்கள்" என்று அவர் அழைத்திட, "முறைப்படி தந்தை எங்களைக் கன்னிகாதானம் செய்துதந்தால் தான் உம்மை அணைவோம்!" என்று அவர் கள் தடைவிதித்திட வாயுதேவனுக்குக் கோபம் வந்தது. தேவகுலத்தவன்—திசை யொன்றுக்குத் தலைவன் வேண்டிக்கொள்ளு கிறான், இந்த அற்ப மானிடப்பெண்கள் மறுப்பதா? தந்தையைக்கேள், தாயைக்கேள் என்று தடைகள் போடுவதா?

வாயுதேவனின் கோபம் அதிகமானது, திடீரென்று மறைந்தான், காற்றிலே கலந்து கொண்டான், காற்றுருவமாக ஆன வாயு தேவன் ஒவ்வொருவர் உடலுள்ளும் நுழைந் தான், வாய்வழியாக, மூக்கு வழியாக, உடலி னுள் புகுந்து, முதுகெலும்பை முறித்தான். வந்தவன் போய்விட்டான் என்று திரும்பிய வனிதையர் நூறுபேரும், ஒவ்வொருவராக முதுகு ஒடிந்து விழுந்தனர். வாயுதேவனின் வஞ்சம், நூறு பெண்களையும் கூனிகளாக்கி விட்டது.

கூனிகளான பெண்கள் நடக்கமுடியாமல், தரையில் விழுந்து தவழ்ந்துகொண்டே தம் தந்தையிடம்போய் சொன்னார்கள். குமரி களுக்கு வந்த கூன்களை எப்படி நிமிர்த்துவது என்று குசநாபனுக்குத் தெரியவில்லை. தனது அமைச்சர், புரோகிதர்களை அழைத்துக் கேட்க, "சூளி என்ற முனிவருக்குப் பிரமதத் தன் ஒன்ற மகன் இருக்கிறான். அவனுக்கு இந்தப் பெண்களைக் கன்னிகாதானமாகத் தந்தால், இவர்களுடைய கூன் போகும் என்று சொன்னார்கள். அதன்படி அரசனும் பிரமதத்தனை அழைத்துவந்து, தாரை வார்த்து, பெண்களைத் தந்தான். பிரமதத்த னும் அந்தப் பெண்களின் ஒவ்வொருவரின் கையைப்பிடித்து ஏற்றுக்கொண்டான். பிரம தத்தனின் கையைத் தீண்டியபொழுதே, குச நாபன் பெண்களின் கூன்கள் போய், முன் போல் நிமிர்ந்துநிற்கும் இயல்பைப் பெற்றன ராம்.

இந்தக் கதை வான்மீகி இராமாயணத்தில் இருக்கிறது. அதைக் கம்பரும் பின்பற்றிப் பாலகாண்டத்தில் வேள்விப்படலத்தில் பாடி யுள்ளார். குசநாபனின் மகளிருக்குக் கிடைத்த தண்டனையும் அது பின் நிவர்த்தியானதும் கூறப்பட்டதேயன்றி, தனித்திருந்த மகளி ரிடம் சென்று அவர்களை அக்கிரமச் செய லுக்கு அழைக்க, அவர்கள் உடன்படாமை யால் நியாயமற்ற முறையில் அவர்கள் முதுகு களை முறித்துச்சென்ற வாயுதேவனுக்கு எவ் வித சாபமோ, தண்டனையோ தரப்பட்டதாகத் தெரியவில்லை. வால்மீகி இராமாயணத்தை தமிழ் இராமாயணமாக ஆக்கிய கம்பரும் ஏதும் சொல்லவில்லை.

இராமதூதனாக வாய்த்த அனுமான் வாயு தேவனுடைய மகனாகும். அஞ்சனை என்ற வானரத்திடம் வாயுதேவனுக்குப் பிறந்தவன். இந்த அஞ்சனை வாயுதேவனுடைய மனைவி யல்ல. அஞ்சனை என்பவள் முதலில் காந்தருவ மாதாக இருநதவள். சாபக்கேடு ஒன்றால் குரங்காக மாறி, கேசரி என்ற குரங்குக்கு மனைவியாக வாழ்ந்துவந்தாள். இந்தச் சமயத் தில், வாயுதேவன் காட்டில் உலவிவர; அங் கிருந்த அஞ்சனையைக் கண்டு காமுற்று அவளைக் கைப்பற்றினான். கேசரியின் மனைவி யான அவளும் வாயுவின் வேண்டுகோளை நிராகரிக்கவில்லை. முடிவில், கேசரியை விட்டு அஞ்சனை வாயுவின் மனைவியாக மாறினாள். வாயுபுத்திரனாக அனுமான் அஞ்சனையிடம் பிறந்தான்.

இந்தக் கதையே திருவேங்கட புராணத்தில் வேறுவிதமாகக் கூறப்பட்டிருக்கிறது. அதன் படி, சிவபெருமானுடைய குமாரனாக, அஞ்சனை

தருவது என்று பொருள். தானந் தரும் பொழுதுதான், தானப்பொருளை வைத்து தாரைவார்த்து—அதாவது புண்ணிய தீர்த்தத்தை ஊற்றிக்கொடுப்பார்கள். அவர்களுடைய கருத்துப்படி, மாடு, கன்று, மண், பொன், மாங்காய், தேங்காய், இவைகளைப் போல பெண்களும் தானமாகத் தரப்படக் கூடிய—தரப்படவேண்டிய பொருள்களில் ஒன்று. ஆதலால்தான், இன்றும் திருமணத்திற்குக் கன்னிகாதானம்—கன்னிகையைத் தானம் தருவது—என்று சாஸ்திர சம்பிரதாய முறையில் இருப்பவர்கள் பெயரிடுகிறார்கள். அந்த முறையில், தாரைவார்த்துக் கொடுத்ததும், பெண்ணை மாப்பிள்ளைக்குத் தானமாகக் கொடுத்ததாக அர்த்தம். அதனால்தான், குசநாபனின் குமரியர், "எம் தந்தை தாரைவார்த்துத் தந்தால் உமக்கு நாங்கள் இணங்குவோம்!" என்று சொல்லுகிறார்கள்.

வேத சாஸ்திர முறைகளின்படி, தந்தை சொல்லியபடிதான் பெண்கள் கணவனை ஏற்றுக்கொள்ளவேண்டும். ஆதலால், குசநாபன் பெண்கள் சொல்லியதை சரியென்று ஒத்துக்கொண்டு, வாயுதேவன் குசநாபனிடம் சென்று தனது வீரதீர பராக்கிரமங்களைச் சொல்லி, பெண்களைத் தாரைவார்த்துப் பெற்றிருக்கலாம். தேவலோகத்தைச் சேர்ந்த அவருக்குப், பெண்களைப் பார்த்தவுடன் பொறுமை இல்லாமற்போய்விட்டது. "இன்றே, இப்பொழுதே என்னை மணந்திடுங்கள்" என்று அவர் அழைத்திட, "முறைப்படி தந்தை எங்களைக் கன்னிகாதானம் செய்துதந்தால் தான் உம்மை அணைவோம்!" என்று அவர்கள் தடைவிதித்திட வாயுதேவனுக்குக் கோபம் வந்தது. தேவகுலத்தவன்—திசையொன்றுக்குத் தலைவன் வேண்டிக்கொள்ளுகிறான், இந்த அற்ப மானிடப்பெண்கள் மறுப்பதா? தந்தையைக்கேள், தாயைக்கேள் என்று தடைகள் போடுவதா?

வாயுதேவனின் கோபம் அதிகமானது, திடீரென்று மறைந்தான், காற்றிலே கலந்து கொண்டான், காற்றுருவமாக ஆன வாயுதேவன் ஒவ்வொருவர் உடலுள்ளும் நுழைந்தான், வாய்வழியாக, மூக்கு வழியாக, உடலினுள் புகுந்து, முதுகெலும்பை முறித்தான். வந்தவன் போய்விட்டான் என்று திரும்பிய வனிதையர் நூறுபேரும், ஒவ்வொருவராக முதுகு ஒடிந்து விழுந்தனர். வாயுதேவனின் வஞ்சம், நூறு பெண்களையும் கூனிகளாக்கி விட்டது.

கூனிகளான பெண்கள் நடக்கமுடியாமல், தரையில் விழுந்து தவழ்ந்துகொண்டே தம் தந்தையிடம்போய் சொன்னார்கள். குமரிகளுக்கு வந்த கூன்களை எப்படி நிமிர்த்துவது என்று குசநாபனுக்குத் தெரியவில்லை. தனது அமைச்சர், புரோகிதர்களை அழைத்துக் கேட்க, "சூலி என்ற முனிவருக்குப் பிரமதத்தன் என்ற மகன் இருக்கிறான். அவனுக்கு இந்தப் பெண்களைக் கன்னிகாதானமாகத் தந்தால், இவர்களுடைய கூன் போகும்" என்று சொன்னார்கள். அதன்படி அரசனும் பிரமதத்தனை அழைத்துவந்து, தாரைவார்த்து, பெண்களைத் தந்தான். பிரமதத்தனும் அந்தப் பெண்களின் ஒவ்வொருவரின் கையைப்பிடித்து ஏற்றுக்கொண்டான். பிரமதத்தனின் கையைத் தீண்டியபொழுதே, குசநாபன் பெண்களின் கூன்கள் போய், முன்போல் நிமிர்ந்துநிற்கும் இயல்பைப் பெற்றனராம்.

இந்தக் கதை வான்மீகி இராமாயணத்தில் இருக்கிறது. அதைக் கம்பரும் பின்பற்றிப் பாலகாண்டத்தில் வேள்விப்படலத்தில் பாடியுள்ளார். குசநாபனின் மகளிருக்குக் கிடைத்த தண்டனையும் அது பின் நிவர்த்தியானதும் கூறப்பட்டதேயன்றி, தனித்திருந்த மகளிரிடம் சென்று அவர்களை அக்கிரமச் செயலுக்கு அழைக்க, அவர்கள் உடன்படாமையால் நியாயமற்ற முறையில் அவர்கள் முதுகுகளை முறித்துச்சென்ற வாயுதேவனுக்கு எவ்வித சாபமோ, தண்டனையோ தரப்பட்டதாகத் தெரியவில்லை. வால்மீகி இராமாயணத்தைத் தமிழ் இராமாயணமாக ஆக்கிய கம்பரும் ஏதும் சொல்லவில்லை.

இராமதூதனாக வாய்த்த அனுமான் வாயுதேவனுடைய மகனாகும். அஞ்சனை என்ற வானரத்திடம் வாயுதேவனுக்குப் பிறந்தவன். இந்த அஞ்சனை வாயுதேவனுடைய மனைவியல்ல. அஞ்சனை என்பவள் முதலில் காந்தருவமாதாக இருந்தவள். சாபக்கேடு ஒன்றால் குரங்காக மாறி, கேசரி என்ற குரங்குக்கு மனைவியாக வாழ்ந்துவந்தாள். இந்தச் சமயத்தில், வாயுதேவன் காட்டில் உலவிவா[ர] அ[ங்]கிருந்த அஞ்சனையைக் கண்டு காமுற்[று] அவளைக் கைப்பற்றினான். கேசரியின் மனைவியான அவளும் வாயுவின் வேண்டுகோளை நிராகரிக்கவில்லை. முடிவில், கேசரியை விட்டு அஞ்சனை வாயுவின் மனைவியாக மாறினாள். வாயுபுத்திரனாக அனுமான் அஞ்சனையிடம் பிறந்தான்.

இந்தக் கதையே திருவேங்கட புராணத்தில் வேறுவிதமாகக் கூறப்பட்டிருக்கிறது. அதன்படி, சிவபெருமானுடைய குமாரனாக, அஞ்சனை

திருமண அழைப்பு

["ராதா"]

கோடை விடுமுறை கழிந்து கல்லூரி திறக்கப்பட்டதும் கல்லூரிக்குத் திரும்பும் மாணவர்களும் புதிதாகச் சேரும் மாணவர்களும் தாங்கள் அந்த ஆண்டில் எப்படிப் படிக்கவேண்டும், நன்கு படிப்பதற்கு எந்தெந்த வழிகளைக் கடைப்பிடிக்கவேண்டும், ஆகியவைபற்றி எண்ணாமலிருக்கமாட்டார்கள். "சினிமா டிராமாவென்று எங்கும் சுற்றாமல், தவறாமல் வகுப்புகளுக்குச் சென்று பாடங்களைக் கவனித்து நன்றாகப் படித்து பாஸ் செய்துவிடவேண்டும்" என்று வகுப்புகளுக்கு மட்டம் போடுவதையே பழக்கமாக்கிக்கொண்ட மாணவர்கள் சிலர் எண்ணிடுவர். "இந்த ஆண்டில் எந்த போட்டிகளிலும் கலந்துகொள்ளாமல் விலகிநின்று படிப்பதற்கு அதிக நேரம் செலவிடவேண்டும்" என்று உறுதிகொள்வர் விளையாட்டுக்களிலே பெரும்பங்கு பெற்றிருந்த வாலிபர்கள். "இந்த ஆண்டிலேயே பாஸ் செய்துவிடவேண்டுமென்றால் அது டியூஷன் வைத்துக்கொண்டால்தான் நடக்கும்" என்ற முடிவுக்கு வந்துவிடுவர் தங்கள் முயற்சியிலே நம்பிக்கையிழந்த சிலர். "ஆஸ்டலில் தங்கினால் இந்த மாணவர்கள் செய்யும் கலாட்டாக்களிடையே படிக்கமுடியாது, வேறு எங்காவது வெளியில்தான் இடம் பார்க்கவேண்டும்" என்று வெளியிடந்தேடி ஒதுங்க நினைப்பர் சிலர்.

ஆனால் இந்த எண்ணங்கள் அனைத்தையும் ஒருங்கே மனதிற்கொண்டு சென்னை வந்து சேர்ந்தான் குமார், தனது பி. ஏ. ஆனர்சின் இறுதி ஆண்டை முடிக்க. அப்படியிருந்தது அவனது சென்ற நான்காண்டுக் கல்லூரி வாழ்க்கை. பேராசிரியர் ஒருவரிடம் டியூஷன் வைத்துக்கொண்டான். நன்கு படிப்பதற்கு வசதிகள் நிறைந்த அமைதியான ஒரு இடத்தைத் தேடினான். அவனது நண்பர்களான வேணுவும் மணியும் துணைசேரவே, மூவருமாகச் சேர்ந்து கல்லூரிக்குப் பக்கத்திலேயே ஒரு தெருவில் ஒரு வீட்டை வாடகைக்கு ஏற்பாடு செய்து, பெட்டி படுக்கைகளுடன் அந்த வீட்டிற்குக் குடிப்புகுந்தனர். நாற்காலிகள், மேசைகள், கட்டில்கள் இவைகளை விலைக்கு வாங்கிவந்து வசதிகளைப் பெருக்கிக்கொண்டனர். வீடு தனி வீடாக அமைந்து காற்றோட்டம் உள்ளதாகவும் அமைதி நிரம்பியதாகவும் இருந்தது. சாப்பாடு மட்டும் ஒரு ஓட்டலில் வைத்துக்கொண்டனர். குமார் டியூஷனுக்குச் செல்வதற்கென ஒரு சைக்கிளும் வாங்கிக்கொண்டான்.

கல்லூரியில் மற்றவர் கண்டு வியக்கத்தக்க வகையில் மூவரும் படிக்க ஆரம்பித்தனர். குமாரிடம் இல்லாத நூல்களில்லை. புத்தகங்களுக்கு மட்டும் ஐந்நூறு ரூபாய்க்குமேல் செலவழித்தான். தினம் இவ்வளவுநேரம் படிக்கவேண்டும், இவ்வளவு நேரம் ஓய்வு இவ்வளவுநேரம் பேச்சு-இப்படி ஒரு முறையை வகுத்துக் கடைப்பிடித்தனர். உலாவச் செல்லும்போதும் சாப்பிடும்போதும் அவர்களுடைய பேச்சுக்கள் பாடசம்பந்தமாகவே இருக்கும்.

சுமார் மூன்றுமாதகாலம் எவ்வித தடங்கலுமின்றி கழிந்தது. குமார் தன்னால் இப்படிப் படிக்கமுடியும் என்று கருதவே இல்லை. வேணுவும் மணியும் முதல் வகுப்பில் தேற முடியுமா, இரண்டாவது வகுப்புதான் கிடைக்குமா என்று கணக்குப்போட்டுக்கொண்டிருந்தனர். ஆனால் இந்த அமைதியான வாழ்வில் முதல் மூன்று மாதங்களோடு முடிவடைந்தன. அவர்களின் கவனத்தைத் திருப்புமளவுக்கு அந்தத் தசரா விடுமுறையில் ஒரு நிகழ்ச்சி நடந்தது.

அன்று இரவு 7 மணியிருக்கும் வேணுவும் மணியும் படித்துக்கொண்டிருந்தனர். குமார் டியூஷனுக்குச் சென்றிருந்தான். "சார்! சார்!" என்று வெளியில் குரல் கேட்டது. வேணு எழுந்துவந்தான். வாசற்படியில் ஒரு வாலிபன் இருபத்தைந்து வயசிருக்கலாம், கையில் ஒரு பையுடன் நின்றுகொண்டிருந்தான். அவனது உடைகள் அவனது வறுமைக்கு எடுத்

துக்காட்டுகளாக அமைந்திருந்தன. ஏதாவது, கையெழுத்துகளை வாங்கி "இவர் அப்படிப்பட் வர் இப்படிப்பட்டவர் ஆகவே இவருக்கு தவியளியுங்கள்" என்று ஒரு கடிதத்தைக் காட்டி இனம் வாங்கவந்த ஆசாமியாகத்தான் இருக்கவேண்டும் என்று முடிவுகட்டினன் வேணு. "இங்கு ஒன்றும் இல்லை. வேறு ங்காவது போய்ப் பார" என்று கூறிவிட்டு மூடியெடுத்துவைத்தான் வேணு.

ஆனல் அந்த வாலிபனே விடுவதாயில்லை, இல்லை சார்! நான் பிச்சைகேட்கவந்திருப் வனல்ல! என்னுடைய வறுமை என்னை இந்த நிலைக்கு கொண்டுவந்து நிறுத்தியிருக் றது. நான் உழைக்காது வாழ விரும்புபவ ல்ல. ஆனல் என் உழைப்பை எவரும் திப்பதில்லை.

நேரம் வீணவதை விரும்பாத வேணு, "சரி இப்ப நான் என்ன செய்யவேண்டும்?" என்று கட்டான்.

"ஒன்றுமில்லை சார்! நான் ஒரு ஓவியன். ல படங்கள் வரைந்துள்ளேன், அவைகளைப் ாருங்கள். உங்களுக்கு பிடித்திருந்தஜெதன் ல் எடுத்துக்கொள்ளுங்கள்."

"இரு, இரு. படங்களை எடுக்கவேண்டாம். ங்கள் மாணவர்கள், படிக்க இங்கு வந்துள் ளாம். இந்தப் படங்களைப் பார்ப்பதிலும் தை இங்கு மாட்டி அழகுகாண்பிப்பதிலும் யனில்லை. ஆகவே, இங்குள்ள பணக்காரர் ின் மாளிகைகளுக்கு இவைகளை 'எடுத்துச் சல். அங்குதான் வாங்குவார்கள்" என்று வணு கூறி முடிப்பதற்கும் குமார் வருவதற் ம் சரியாக இருந்தது.

"என்ன! யார் இவர்?"

"இவர் ஒரு ஓவியராம்! சில படங்களைப் ர்த்து எடுத்துக்கொள்ளச் சொல்லுகிறார்!"

"ஆமாம் சார்! எங்கும் சுற்றியாகிவிட்டது ரும் எடுத்துக்கொள்ளவில்லை. இவைகளை ற்றுத்தான் இரண்டு உயிர்கள் வாழவேண்டி ருக்கிறது. சார் தயவுசெய்து ஏதாவது டுத்துக்கொண்டால் நலமாயிருக்கும்" ன்று கூறிக்கொண்டே படங்களை வெளியே டுத்தான் அந்த இளைஞன்.

உண்மையில் அந்தப் படங்கள் மிகவும் முகாக இருந்தன. இயற்கைக் காட்சிகள் ழகுற நல்லவர்ணங்களில் தீட்டப்பெற்றிருந் ன. மற்றும் நாய்கள், பூனைகள், மானகள் ன்று பல இருந்தன. தேய்ந்துபோன கிராமபோன் ரிகார்டுகளில் அவைகள் தீட்டப் பட்டிருந்தன. படங்களைச் சுவற்றில் மாட்டி ல் அழகாய்த்தானிருக்குமென் எண்ணி, "சரி. என்ன விலை ஒவ்வொரு படமும்" என்று கேட்டான் குமார்.

"இன்ன விலை என்று கிடையாது சார். உங்களுக்கு எந்தப்படங்கள் பிடிக்கின்றனவோ அவைகளை எடுத்துக்கொள்ளுங்கள். அதற்கு உங்களால் எவ்வளவு கொடுக்கமுடியுமோ அதைக் கொடுங்கள்" என்றன் அந்த ஓவி யன்.

இரண்டு படங்களை எடுத்துக்கொள்ளலாம் என்று படங்களைப் பார்த்தான். எதையோ கூர்மையாக பார்த்துக்கொண்டிருப்பதைப் போல் ஒரு நாய் வரையப்பட்டிருந்தது. அது குமாருக்கு மிகவும் பிடித்திருந்தது. இயற்கைக் காட்சிகள் செறிந்த மற்ருெரு படத்தையும் எடுத்துவைத்தான். "இந்த இரண்டு படங் களுக்கும் என்ன வேண்டும்?"

"நீங்கள் கொடுப்பதைக் கொடுங்கள்."

குமார் பையிலிருந்து ஒரு ஐந்து ரூபாய் நோட்டை எடுத்து நீட்டினன். அதை வாங் கிக்கொண்டு, "நல்லது சார். இரண்டு போதுமா? இன்னும் என் வீட்டில் நிறைய படங்கள் இருக்கின்றன, தாங்கள் விரும்பினல் கொண்டுவருகிறேன்" என்று சொல்லிக் கொண்டு மற்ற படங்களைப் பையில் வைத் தான்.

"உன் பெயரென்ன? சொந்த ஊர் எது?" என்று குமார் கேட்டான்.

"என் பெயர் மோகன். இந்த நாட்டில் எனக்கு எந்த ஊரும் சொந்த ஊரல்ல. நான் பிறந்து வளர்ந்தது இலங்கையிலே. நாட் டுரிமை இழந்து வெளியேற்றப்பட்ட பலரில் எங்கள் குடும்பமும் ஒன்று. நான் சென்னைக்கு வந்து ஒருமாதகாலமாகிறது. இதே தெருவில் கோடிவீட்டில்தான் இருக்கிறேன். தாங்கள் இன்னும் படங்கள் விரும்பினல் கொண்டு வருகிறேன்."

"வேண்டுமானல் சொல்லியனுப்புகிறேன்." மோகன் மீதிப்படங்களை எடுத்துக்கொண்டு புன்னகை பூத்தமுகத்துடன் வெளியேறினன். குமார் அந்த இரண்டு படங்களையும் தனது மேசைக்குமேல் சுவற்றில் ஆணியடித்து மாட்டினன்.

"குமார்! இதை ஏன் ஐந்துரூபாய் போட்டு

வாங்கினாய்? நீ அதிகம் கொடுத்துவிட்டாய்" என்றான் மணி.

"ரூபாய் கிடக்கட்டுமப்பா. இந்தப் படங்களால் என்ன பிரயோஜனம்? இப்போது இவைகளை மாட்டினால் நாளை ஒரு அழகான காலண்டர் வந்தால் அதையும் மாட்டச்சொல்லும்—இப்படி அலங்காரங்களைச் செய்வதிலே நாம் சிந்தனையைச் செலுத்தினால் அப்புறம் பரிட்சையில் நாம் மாட்டிக்கொள்ளவேண்டியதுதான்" என்று வேணு பேசினான்.

குமாருக்கு என்றுமில்லாக் கோபம் வந்துவிட்டது. "சரி! இது என் இஷ்டம். எதைச் செய்யவும் எனக்கு உரிமையுண்டு. இதில் நீங்கள் தலையிடவேண்டாம்" என்று இறைந்தான். வேணுவும் மணியும் ஒன்றும் பேசாமல் படிக்கத் தொடங்கினர்.

சாதாரணவிஷயத்தில் ஏற்பட்ட இந்தச் சச்சரவு அடங்கியது என்றாலும், இரண்டு நாட்களுக்குப் பின் நிகழ்ந்த ஒரு சம்பவம் நண்பர்களுக்குள் ஒரு பிளவையே உண்டாக்கிவிட்டது. அன்று இரவு 9 மணியிருக்கும். சாப்பாட்டிற்குச் சென்று திரும்பியதும் லைட்டைப் போடுவதற்காகச் சுவற்றிலுள்ள சுவிச் இருக்கும் இடத்தைத் தடவினான் வேணு. திடீரென்று ஏதோ கையில் பட்டுக் கீழே விழுந்து உடைந்தது. சுவிச்சைப் போட்டதும் கீழே பார்த்தான். அந்த நாயின்படம் அலங்கோலமாக உடைந்துகிடந்தது. அவ்வளவுதான் புலியெனச் சீறிவிட்டான் குமார்! நண்பர்களுக்குள் பெரிய சண்டை மூண்டது. அதன் முடிவாக வேணுவும் மணியும் மறுநாள் வெளியேறினர்.

மோகனைப் பார்க்க, குமார் அந்த வீட்டிற்குச் சென்றான். கதவு சரியாகத் திறக்கப்படாமல் இருந்தது, "மோகன்! மோகன்!" என்று குரல் கொடுத்தான். எவ்வித பதிலும் இல்லாததால் மறுபடியும் கூப்பிட எண்ணிய போது ஒரு பெண் கதவைச் சற்றே திறந்தாள். "அவர் இல்லை. கடைத்தெருவிற்குப் போயிருக்கிறார். மத்தியானம் வருவார். வந்ததும் சொல்லுகிறேன், நீங்கள் யாருன்னு சொல்லிவிட்டுப்போங்கள்."

"ஒன்றுமில்லை. இரண்டு நாட்களுக்குமுன் ஒரு படம வாங்கியிருந்தேன். அது உடைந்துவிட்டது. அதேபோன்று மற்றொரு படம் வரையவேண்டும். அதைச் சொல்லிவிட்டுப் போகத்தான் வந்தேன். என் பெயர் குமார்."

"சரி சொல்லுகிறேன்."

குமார் அவளைச் சற்று உற்று நோக்கினான். அணிமணிகள் எதுவுமில்லை ஆனால் மிக அழகுடன் விளங்கினாள். மோகனுடைய சாயல் அவள் முகத்தில் தெரிந்தது. ஒருகால் மோகனுக்குத் தங்கையாக இருக்குமோவென்று எண்ணினான். இதற்குள் அவள் கதவுக்குப் பின் மறைந்து, நிற்கவே குமார் தன் நிலை உணர்ந்து, "நான் வருகிறேன்," என்று கூறிவிட்டு வந்துவிட்டான்.

வீட்டிற்குத் திரும்பிய குமார் அமைதியின்றித் தவித்தான். நண்பர்களின் பிரிவு ஒருபுறம் கோபத்தையும் அவள் நினைவு ஒருபுறம் தாபத்தையும் ஏற்படுத்தியவண்ணம் இருந்தது. எதிலும் கவனத்தைத் திருப்பமுடியவில்லை. மாலையில் மோகன் வந்து பேசிக்கொண்டிருந்தபோதும், அவளைப்பற்றி எதையுமே அவன் குறிப்பிடாமலிருந்தது அவனுக்கு மிகவும் வருத்தத்தை அளித்தது. அவள் மோகனுக்கு மனைவியா தங்கையா என்பதைத் தெரிந்துகொண்டாலே போதும் என்று எண்ணினான். ஆனால் மோகனிடம் இதைப்பற்றிக் கேட்கவும் பயந்தான். அவளுக்கும் மோகனுக்கும் உள்ள உறவு முறையை எப்படி அறிந்துகொள்வது என்று யோசிக்கபடி இருந்தான்.

மறுநாள் காலையில் அந்த நாயின படத்தை மோகன் வரைந்துவிட்டானா என்பதை அறிய விரும்புபவன்போல் குமார் மோகன் வீட்டிற்குச் சென்றான். அப்பொழுது கதவு மூடப்பட்டிருந்தது. கதவைத்தட்டக் கையெடுத்தவன் உள்ளே பேச்சுக்குரல் கேட்கவே, நிறுத்தி உற்றுக்கேட்டான். "......அண்ணா, சாப்பிட்டுவிட்டு வரையுங்கள்" அவள் குரல் கேட்டது. மோகனுடைய தங்கைதான் அவள் என்ற நம்பிக்கை ஏற்பட்டது குமாருக்கு. உள்ளே அமைதி நிலவவே, "மோகன்!" என்று கூப்பிட்டான். கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தான மோகன்.

"வாங்க. உங்க படந்தான் வரைந்துகொண்டிருக்கிறேன். இப்படி உட்காருங்க" என்று திண்ணையில் ஒரு பாயை விரித்தான் மோகன். பிறகு உள்ளே சென்று "சுசிலா இன்னொரு காப்பி போடு" என்று கூறிவிட்டு வந்தான்.

"மோகன், எனக்கு காப்பி எதுவும் வேண்டாம். சும்மா அந்தப் படம் வரைந்தாகிவிட்டதா என்று பார்க்கத்தான் வந்தேன்!" என்றான் குமார்.

மோகன் ஒரு பெரிய ஆல்பத்தை குமாரிடம் கொண்டுவந்து கொடுத்தான். அதில் மோகன் தீட்டிய பலவித சித்திரங்கள் அடங்கியிரு

தன. குமார் அதனைப் பார்வையிட்டுக்கொண் டிருக்கும்போது சுசிலா இரண்டு கோப்பை களில் காப்பி கொண்டுவந்து வைத்தாள். அவளைப் பார்க்காதவன்போல் குமார் படங் களை பார்த்துக்கொண்டிருந்தான். ஆனால் ஒவ்வொரு படங்களிலும் சுசிலாவின் முகம் தெரிந்தது.

“ சார் காப்பியை சாப்பிடுங்கள் என் மனைவி காப்பி தயாரிப்பதில் கைதேர்ந்தவள். சித்தி ரங்கள் கூட வரைவாள் ” என்றான் மோகன்.

குமாரினால் கொஞ்சநேரம் ஒன்றும் பேசமுடி யவில்லை. மோகனின் வார்த்தைகள் அவனை திடுக்கிடச்செய்தது. சுசிலா—மோகனை அண்ணா என்று அழைத்தாள், ஆனால் மோகன் சுசிலாவை மனைவியாகக் கூறுகி றானே! எதை நம்புவது! என்ன உறவு என்று இப்போதும் குமாருக்குப் புரியவில்லை. காப் பியை சாப்பிட்டுமுடித்ததும், “காப்பி மிகவும் நன்றாயிருக்கிறது. மோகன் நான் வருகிறேன். மத்தியானம் என் வீட்டிற்குவா, இந்தப் படங் களை எடுத்துக்கொண்டு. நான் அவைகளை வாங்கிக்கொள்கிறேன்” என்று கூறி விடை பெற்றுச் சென்றான்.

குமாருக்கு மேலும் குழப்பமாகவிருந் தது. இந்த ஓவியனை ஏன் சந்தித்தோமென்று எண்ணினான். ஆண்டு ஆரம்பத்தில் போட்ட திட்டங்களெல்லாம் தவிடுபொடியாகிவிட்டது. நண்பர்கள் பிரிந்துவிட்டது அவனுக்கு பெரிய இழப்பாகத் தோன்றியது. இனி நிம்மதியா கத் தான் படிக்கமுடியாதென்ற எண்ணம் அவ னுக்கு ஏற்பட்டது. ஊருக்குச் சென்று ஒரு வாரகாலம் தங்கினால் மன அமைதி ஏற்படும் என்று கருதி, அன்றிரவே புறப்படுவதற்கு ஆயத்தமானான். சுசிலாவைப்பற்றிய எண் ணங்களை மறப்பதற்கும் ஒரு வழி ஏற்படும் என்று நினைத்தான்.

அன்று மத்தியானம் சாப்பிட்டபின் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு சிகரெட் பிடித்துக்கொண்டிருந்தான். அவனது சிந் தனை சுசிலாவைப் பற்றித்தான் இருந்தது. “சுசிலா உண்மையாகவே மோகனின் மனைவி யாக இருந்தால்”—குமார் மேற்கொண்டு சுசி லாவை எண்ணிச் சிந்தையை குழப்பிக்கொள் ளக்கூடாது என்று நினைத்தான். ஆனால் அவனை உடன் நினைவுபடுத்துவதுபோல் மோகன் அங்கு வந்தான்.

“ சார், அந்தப் படம் நானேதான் முடியும். நானே எடுத்துவருகிறேன். இவைகளை எடுத்து வந்திருக்கிறேன்.”

“ மோகன், இன்று நான் ஊருக்குப் போகி றேன். திரும்பிவர பத்து தினங்கள் செல்லும். அந்த நாயின் படத்தைபபோல் இன்னொன்று பலகையில் வரைந்து போஸ்ட் மூலம் எனக்கு அனுப்பிவிடு. எனது வீட்டில் அதை மாட்டி வைக்க விரும்புகிறேன். ரிகார்டுகளில் வரைந்த படம் உடைந்துவிடக்கூடுமாதலால் பலகை யில் வரைந்துவிடு. இந்தா இதை வைத்துக் கொள் ” என்று கூறி குமார் இரண்டு பத்து ரூபாய் நோட்டுகளையும் தனது விலாசம் குறித்த ஒரு கார்டையும் கொடுத்தான்.

விலாசத்தை வாங்கிப் பார்த்ததும் திடுக் கிட்டு, திகைப்புடன் குமாரை நோக்கினான். குமாருக்கு ஒன்றும் புரியவில்லை. “ இதில் குறித்திருக்கிறீர்களே சதாசிவம் பிள்ளை என்று, அவர்...”

“ ஆமாம். என் தந்தை.”

“ அப்படியானால் சுந்தரம் உங்களுக்கு அண் ணன்...?”

“ ஆமாம், ஏன். உனக்கு முன்பே தெரி யுமா ?”

மோகன் கண்களில் கண்ணீர் பெருகி வழிந் தது. குமாருக்கு என்னவென்று புரியவில்லை. “ மோகன் என்ன விஷயம் சொல்லு ?” என்றான்.

“ சார் ! உங்களை நான் சந்திப்பேன் என்று எதிர்பார்க்கவேயில்லை. இதுவரை நான் ஒரு ரகசியத்தை அடக்கிவைத்திருந்தேன்-அதைக் கூறவேண்டிய நேரம் வந்துவிட்டது. ஆனால் ஒன்று. தாங்கள் எனக்கு உதவிசெய்வேன் என்று வாக்குறுதியளித்தால்தான் நான் அதைக் கூறமுடியும் ?”

“ என்னால் இயலுமானால் கட்டாயம் உதவி செய்கிறேன் என்ன விஷயம் சொல்லு ?”

“ சுசிலா என் மனைவியல்ல, என் தங்கை. அவளை மணக்கவேண்டியவன் சுந்தரம்— உங்கள் அண்ணன்தான்.”

“ என்ன ? எப்படி ?” பதறினான் குமார்.

“ ஆமாம் ! சுசிலா இப்பொழுது மூன்று மாத கர்ப்பிணி. அதை உருவாக்கியவன் சுந்தரம் தான்.”

குமாரின் தலை சுக்கு நூறாக வெடித்துவிடும் போலிருந்தது. அப்படியே சாய்ந்துவிட்டான் நாற்காலியில். மோகன் தனது கதையைக் கூற ஆரம்பித்தான்.

"ஆறு மாதங்களுக்கு முன்புதான் நானும் எனது தங்கை சுசிலாவும் இலங்கையிலிருந்து வந்தோம். முதலில் தஞ்சையில் தங்கி நான் வேலைக்காக அலைந்தேன். நிலையான வேலை எதுவும் கிடைக்கவில்லை. இம்மாதிரி சித்திரங்கள் எனக்குச் சிறிது வருவாயைக் கொடுத்துவந்தது. மூன்று திங்களுக்குப்பின் நானும் சுசிலாவும் கும்பகோணம் சென்றோம். அங்கு எனக்குக் கொஞ்சம் வேலைகள் கிடைத்தன. கடைகளுக்கு போர்டுகள் எழுதித் தருவதிலேயே எனக்கு போதுமான வருவாய் வந்தது. ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து என் தொழிலை நல்ல முறையில் நடத்தலாம் என்று எண்ணி, வசதியான வீட்டைத் தேடி அலைந்தேன். உங்கள் தெருவில் உங்களுக்குச் சொந்தமான அந்த ஓட்டுவீடு எங்களுக்குக் கிடைத்தது. நானும் சுசிலாவும் அங்கு குடியேறினோம். என தொழிலும் முன்னேறிக் கொண்டுவந்தது. சில மாதங்களில் நூறு ரூபாய்க்குமேல்கூட கிடைத்தது.

சுந்தரம் எனது ஓவியங்களை அடிக்கடி வந்து பார்த்துப்போவார், சில ஆர்டர்களும் கொடுத்தார், எங்களுக்கு வேண்டிய பல வசதிகளையும் செய்துகொடுத்தார். ஆனால் சுந்தரம் சுசிலாவைச் சந்திக்கும்பொருட்டுத்தான் என் வீட்டிற்கு அடிக்கடி வந்தான என்பது எனக்கு அப்போது தெரியாது. நான் வீட்டில் இல்லாத சமயங்களில் சுந்தரம் வருவதும் சுசிலாவுடன் பழகுவதுமாக இருந்திருக்கிறான், சுசிலாவும் அவன் வலையில் வீழ்ந்திருக்கிறாள். ஒருநாள எனது சித்திரங்களை எடுத்துக் கொண்டு சில பெரியமனிதர்களைப் பார்த்துவர வெளிக்கிளம்பினேன். மாலையில் வீடு திரும்பியபோது சுசிலா அழுதுகொண்டிருக்கக் கண்டேன். காரணங்கேட்க அவள் சொன்ன பதில், என்னைச் சம்மட்டிகொண்டு அடிப்பது போலிருந்தது. சுந்தரம் தன்னைக் கெடுத்ததோடு மணம் செய்துகொள்ள மறுத்துவிட்டதாகவும் அவள் தெரிவித்தாள். என் தாய் தந்தையர் இறந்ததிலிருந்து அவளை ஒரு நாள்கூடக் கோபித்ததில்லை. அன்று, கையிலிருந்த படத்தைக்கொண்டு நன்றாக அடித்துவிட்டேன். பிறகு அவளுடன் சேர்ந்து அழவும் செய்தேன். சுசிலா வேறு ஏதாகிலும் விபரீத காரியங்களில் இறங்கிவிடக்கூடாதென்று கருதி அவளைச் சமாதானப்படுத்தி சுந்தரத்தை எப்படியும் சம்மதிக்கச் செய்கிறேன் என்று வாக்களித்தேன். அன்றிரவே சுந்தரத்தை சந்தித்துக் கேட்டேன். தன்னால் இயலாதென்றும், தனது தந்தை சம்மதிக்க மாட்டாரென்றும் பிடிவாதமாகக் கூறிவிட்டான். நான் சதாசிவம் பிள்ளையின் காலில் விழுந்து விஷயத்தைக்கூறி மானத்தைக் காக்கவேண்டினேன். அவரோ புலியெனச் சீறி, தன்னுடைய செல்வாக்கைக்கொண்டு என்னையும் சுசிலாவையும் ஊரைவிட்டே கிளம்பும்படிச் செய்துவிட்டார்.

திரும்பவும் நாடோடியாக சுசிலாவை அழைத்துக்கொண்டு சென்னை வந்து சேர்ந்தேன். சுசிலாவின் எதிர்காலத்தை என்னால் தீர்மானிக்கமுடியவில்லை. ஆனால் எவ்வித தற்கொலை முயற்சிக்கும் இறங்கக்கூடாதென்று சுசிலாவிடம் உறுதிமொழி பெற்று, எப்படியும் சுந்தரத்தை மனம்மாறச்செய்து திருமணத்தை நடத்திவைக்கிறேன் என்று சொல்லிவைத்தேன். அவளை ஒரு டாக்டரிடம் அழைத்துச்சென்று அவளுக்குத் தெரியாமல் கருவை அழித்துவிடமுடியுமா என்று கேட்டேன். டாக்டர் தயங்கினார். நான் நிலைமையைக்கூறி வேண்டிய பணம் தருவதாகக் கூறினேன். அவர் சுசிலாவைப் பரிசோதனை செய்துவிட்டு, கருவை அழிக்கமுடியாதென்றும், அந்த முயற்சியில் இறங்கினால் அவள் உயிருக்கு அபாயம் நேரிடும் என்றும் தெரிவித்தார். அதற்குப் பின் எனக்கு நிம்மதியான தூக்கமே கிடையாது. சிந்தித்துக் கொண்டே இருக்கிறேன், இதுவரை ஒரு வழியும் தோன்றவில்லை. ஊராரின் அவதூறான பேச்சுக்கு இடமளிக்கக்கூடாதென்று கருதியே, இதுவரை சுசிலாவை என் மனைவி என்று எல்லோருக்கும் கூறிவந்தேன், அவளையும் அப்படியே நடிக்கச்செய்தேன்."

மோகன் இவ்வாறு கூறிமுடித்ததும், குமார் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு எழுந்து அங்குமிங்கும் உலவினான்.

"குமார் நாங்கள் மானத்தோடு வாழ நீயாவது உதவமாட்டாயா?" மோகன் அழுதுகொண்டே கேட்டான்.

"மோகன் கவலைப்படாதே! என் உதவி உனக்கு நிச்சயம் உண்டு. நான் சொல்லுகிறபடி செய். நீ சுசிலாவை அழைத்துக்கொண்டு இங்கு வந்துவிடவேண்டும், நான் ஊருக்குத் தந்திகொடுத்து சுந்தரத்தை வரவழைக்கிறேன். நாளை காலை வந்துவிடுவான்" என்று குமார் கூறியதும் மோகன் மகிழ்ச்சியுடன் விடைபெற்றுச் சென்றான்.

மறுநாள் காலை சுந்தரம் வந்துசேர்ந்தான்.

"என்ன குமார்! உடம்புக்கு என்ன?"

"உடம்புக்கு ஒன்றுமில்லை. உன்னிடம்

திருமண விஷயம் பற்றிப் பேசவேண்டும். அதற்குத்தான் தந்திகொடுத்தேன். முதலில் ல் துலக்கிவிட்டுச் சாப்பிடவா பிறகு பேசு வாம்.''

டிபன் முடிந்ததும் குமார் சுந்தரத்திடம் ஒரு டிதத்தை நீட்டினுன். அதில் கையெழுத்துப் பாடப்படவில்லை. சுந்தரம் அதை வாசித் தான்.

சென்னை.
21-9-54

அன்புடைய அப்பா அவர்களுக்கு!

வணக்கம். நலம். நான் இங்கு வந்து திடீரென்று இப்படியொரு கடிதம் எழுது வேன் என்று தாங்கள் எதிர்பார்த்திருக்கமாட்டீர்கள். நான் உங்களைக் கலக்காமல் என் திருமணத்திற்கு ஏற்பாடு செய்துகொண்டதற்கு மன்னிக்கவும். நான் கலப்புமணம் செய்துகொள்ளப்போகிறேன். தாங்கள் விரும்பமாட்டீர்கள் என்று எனக்கு நன்ருகத் தெரியும். திருமணம் நாளை நடைபெறுகிறது. இதையே எனது திருமண அழைப்பிதழாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

இப்படிக்கு
உங்களன்புள்ள

சுந்தரம் குமாரைப் பார்த்தான்.

"என்னடா குமார் இது!"

"எவ்வளவோ யோசித்துத்தான் இந்த டிவக்கு வந்தேன். காதலித்த அவளைக் கவிடக்கூடாது. இதற்கு உன் சம்மதம் வண்டும்."

குமார் இப்படி மாறியிருப்பானென்று ந்தரம் எதிர்பார்க்கவில்லை. தந்தையை திர்த்துக் கலப்புமணம் செய்துகொள்ளத் ணிந்துவிட்டானே என்று ஆச்சரியப்பட் ன். சாதாரண விஷயத்தில்கூட குமாருக்கு திராக சுந்தரத்தால் எதுவும் பேசமுடி து; இந்த விஷயத்தில் கேட்கவா வேண் டு.

"குமார்! திருமணம் அவரவர்களின் சாந்த விஷயம். அதை எவரும் கட்டுப்படுத்தக்கூடாது; காதலித்த பெண்ணை அவன் கண்கலங்கக் கைவிடக்கூடாதுதான். என் உதவி உனக்கு எப்போதும் உண்டு. உன் இஷ்டப்படி செய்துகொள். ஆனுல் இவ்வளவு தைரியமாக நீ காரியத்தில் இறங்குவாயென நான் கருதவே இல்லை. அந்தப் பெண் எங்கே இருக்கிருள்?'' என்றுகூறி, குமார் உள்ளம் பூரிக்கும்படி எப்படியோ பேசிவிட்டதாகச் சுந்தரம் எண்ணினுன். ஆனுல் குமாருக்கு ஏற்பட்ட தைரியம் தனக்கு சுசிலாவுடன் பழகியபோது வரவில்லையே என்று வருந்தினுன்.

"ரொம்ப சந்தோஷம் அண்ணு. அந்தக் கடிதத்தில் கையெழுத்திட்டு அதை அப்பாவுக்கு போஸ்ட் செய்துவிடு."

"நான் எப்படிடா கையெழுத்திடமுடியும்? நீதானே போடவேண்டும்."

"திருமணம் செய்துகொள்ளவேண்டியவர் தானே கையெழுத்திட வேண்டும்?"

"அப்படியென்ருல்......?"

"திருமணம் உனக்குத்தான்."

"குமார். என்னடா விளையாட்டு இது!"

"விளையாட்டல்ல அண்ணு! உண்மைதான். இதோ பாருங்கள்!'' குமார் கைதட்டினுன். எதிர் அறையைத் திறந்துகொண்டு சுசிலாவும் மோகனும் வெளியே வந்து நின்ருர்கள். சுசிலாவின் கண்களிலிருந்து கண்ணீர்வழிந்துகொண்டிருந்தது.

சுசிலாவைக் கண்டவுடன் சுந்தரம் அயர்ந்து போய்விட்டான். அவனது கைகால்கள் நடுங்கின. கலங்கிய கண்களுடன் சுசிலா கெஞ்சுதல்—தனது துரோகம்—மோகனின் வேண்டுகோள்—தந்தையின் மிரட்டல்—ஒன்றன்பின் ஒன்ருக அந்தச் சம்பவங்கள் சுந்தரத்தின் மனதிற் தோன்றி மறைந்தன. கையிலே இருந்த கடிதத்தை மறுபடியும் படித்து முடித்து சுசிலாவைப் பார்த்தான்; அவன் கண்களில் புதியதோர் ஒளி வீசியது. சுசிலா முகத்தைத் துணியால் மூடிக்கொண்டு தூணிற் சாய்ந்தபடி அழுதுகொண்டிருந்தாள். சுந்தரம் கடிதத்தை மேசையின்மேல் வைத்து தனது பேனுவை எடுத்தான். "உங்கள் மருமகள் வேறுயாருமில்லை — சுசிலாதான்!'' என்று கடைசிவரியாக எழுதிக் கையெழுத்து மிட்டுக் கடிதத்தை எடுத்துக்கொண்டு சுசிலாவிடம் சென்றுன். கண் ஜாடை செய்து மோகனை அழைத்துக்கொண்டு மகிழ்ச்சி பொங்க ஹாலைவிட்டு வெளியேறினுன் குமார்.

வினாவும் விளக்கமும்

வினா : உலக நாடுகளெல்லாம் ஒன்றாக இணைந்து கொண்டுவரும்போது, திராவிடநாட்டைத் தனியே பிரித்துக்கொண்டு செல்ல வேண்டும் என்று எண்ணுவது குறுகிய நோக்கம் அல்லவா?

விளக்கம் : இப்படிக் கேட்கும் அரசியல் தலைவர்கள் சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள்!

திராவிடநாடு தனி நாடாவது குறுகிய நோக்கமா அல்லவா என்ற ஆராய்ச்சிக்கு வருமுன், உலகநாடுகள் ஒன்றாக இணைகின்ற பரந்த நோக்கம் எங்கே நிறைவேறி வருகிறது என்பதுதான் தெரியவில்லை.

உலகில் தனித்தனியாக வாழ்ந்த சுதந்திர சுயேச்சை நாடுகளில், எந்த இரண்டு நாடுகள், தாங்கள் தனித்தனியாக வாழும் தன்மையை விட்டுவிட்டு, வடநாடும் தென்னாடும் இந்தியாவாக இன்றைய நிலையில் இணைந்திருப்பதைப் போல, ஒன்றாக இணைந்துவிட்டன என்று கேட்க விரும்புகிறோம். பெரிய வல்லரசுகள் ஆதிக்க வெறியின் காரணமாகப் பலநாடுகளைப் போர் முறையில் வென்று, அவைகளை அவைகளின் விருப்பத்திற்கு மாறாக ஒன்றாக இணைத்திருக்கின்றனவே ஒழிய, எந்த இரண்டு நாடுகள் தம் தனி உரிமைகளையெல்லாம் விட்டுக்கொடுத்துவிட்டு ஒன்றாக இணைந்துவிட்டன?

உலக நாடுகள் ஐக்கியநாடுகள் அவையில் உறுப்பேற்றிருப்பது, ஒன்றாக இணைந்திருப்பதற்கு அறிகுறி என்றால், அந்தவகையில் பிரிந்த திராவிடமும் உறுப்பேற்க இயலுமே! அத்தகைய இணைப்பிற்குத் திராவிடப் பிரிவினை இடையூறாக நிற்காதே!

பல்வேறு துறைகள்பற்றிய உலகநாடுகளின மாநாடுகள் அடிக்கடி நடைபெறுவது உலக நாடுகள் ஒன்றாக இணைவதின் அடையாளம் என்றால், அத்தகைய மாநாடுகளில் பிரிந்த திராவிடமும் கலந்துகொண்டு மற்றைய நாடுகள் வளர்க்கும் ஒற்றுமையைத் திராவிடமும் வளர்க்கமுடியுமே! திராவிடப் பிரிவினை இந்த வகை ஒற்றுமையைக் கெடுக்கவல்லது அல்லவே!

உலக நாடுகள் நாட்டோடு நாடு உடன்படிக்கைகள் பலப்பல செய்துகொண்டு வாழ்வதை, ஒன்றாக இணைந்துவிட்டன என்பதற்கு எடுத்துக்காட்டாகக், கேள்விகேட்போர் முன் வைக்கிறார்கள் என்றால், மற்றைநாடுகள் செய்துகொள்ளும் அதே அளவு உடன்படிக்கைகளைப் பிரிந்த திராவிடமும் செய்துகொள்ளலாமே! உலக நாடுகள் எந்த அளவுக்கு உடன்படிக்கைகள் மூலம் ஒன்றாக இணைகின்றனவோ, அந்த அளவுக்குப் பிரிந்த திராவிடமும் பிறநாடுகளுடன் ஒன்றாக இணையலாமே! திராவிடநாட்டுப் பிரிவினை, இத்தகைய உடன்படிக்கைகள் மூலம் பெறப்படும் உலக ஒற்றுமையை எந்தவகையில் கெடுத்துவிடும்? உடன்படிக்கைகள் செய்துகொள்ளும் உலக நாடுகளின் எண்ணிக்கையில், ஒன்று கூட ஆகும், அவ்வளவுதான்!

நல்லெண்ணத் தூதுக்குழுக்களையும், பண்பாட்டுக் குழுக்களையும் உலகநாடுகள் தம்முள் ஒன்றிற்கொன்று அனுப்பி ஒற்றுமையை வளர்க்கின்றன என்றால், அத்தகைய ஒற்றுமையைத் திராவிடப் பிரிவினை எந்தவகையிலும் கெடுத்துவிடக் காரணமாக இருக்காதே! பிரிந்த திராவிடம் பிறநாட்டுக் குழுக்களை வரவேற்கவும் செய்யலாம்; தன்னுடைய குழுக்களைப் பிறநாடுகளுக்கு அனுப்பிவைக்கவும் செய்யலாம்! திராவிடப் பிரிவினை இந்தச் செயல்களுக்குத் தடங்கலாக இருக்காதே! நல்லெண்ண ஒற்றுமையையும், பண்பாட்டு ஒற்றுமையையும் வளர்க்க உலகநாடுகள் எப்படியெல்லாம் பாடுபடுகின்றனவோ, அப்படியெல்லாம் பிரிந்த திராவிடமும் பாடுபட இயலுமே!

இன்றைய நிலையில் தனித்தனியாகப்பிரிந்து நிற்கும் உலக நாடுகள் எந்த அளவுக்கு ஒன்றாக ஆகும் தன்மையை வளர்க்கின்றனவோ, அதே அளவுக்குத் திராவிடமும் பிரிந்துநின்று வளர்க்க முடியுமே! திராவிடத்தைவிட மிகச் சிறிய நாடுகளான இலங்கை, பர்மா, மலேயா, சயாம், இந்தோசீனா, பிரிட்டன், பிரான்சு இத்தாலி, போர்ச்சுக்கல், பெல்சியம் ஆலண்டு, இலக்சம்பர்க்கு, சுவிட்சர்லாந்து

ரான், ஈராக்கு, லெபனான், மொராக்கோ, சான் ரினோ, அந்தோரா, மெக்சிகோ, அர்சண் டனா போன்ற இன்னபிற நாடுகளெல்லாம் னித்தனி நாடுகளாகப் பிரிந்து நின்று ளர்க்கும் உலக ஒற்றுமையை, இவைகளை ல்லாம்விடப் பெரிதாக விளங்கும் திரா டம் மட்டும் ஏன் பிரிந்து நின்று வளர்க்க டியாது?

"உலக நாடுகள் ஒன்றாக இணைந்துவரும் ந்த நாளில் திராவிடப் பிரிவினை தகுமா?" ன்ற முறையில் கேட்பவர்களின் கேள்வி எவ் ளவு பொருளற்றது என்பது ஆராய்ந்து ர்த்தால் விளங்கும். "திராவிடம் தனி டாகப் பிரிந்தபிறகு உலக நாடுகள் எதனோ ம் எவ்விதத் தொடர்பும் வைத்துக்கொள் ரது" என்று நாம் கூறியிருந்தால், மேற் ண்ட கேள்வி கேட்பதில் பொருள் இருக்க டியும். "இன்று உலகநாடுகள் எந்தமுறை ல் தனித்தனியாகப் பிரிந்து நிற்கின்றனவோ தே முறையில் திராவிடமும் தனி நாடாகப் ரிந்து, உலகநாடுகள் எந்தமுறையில் ஒற்று மயாகப் பணியாற்றுகின்றனவோ அந்த றையில் ஒற்றுமையாகப் பணியாற்றும்" ன்றுதான் நாம் குறிப்பிடுகிறோம். வட ட்டையும் தென்னாட்டையும் எப்படி இன்று ர ஆட்சியின்கீழ் ஒன்றாக இணைத்திருக்கின் கனோ, அப்படியா உலகநாடுகள் எல்லாம் ணைக்கப்பட்டிருக்கின்றன அல்லது ணைந்துவருகின்றன? அல்லவே!

ந்த இரண்டுநாடுகள் தங்களுடைய எல் க் கோடுகளையெல்லாம் அழித்துவிட்டு, ட்சியுரிமைகளையெல்லாம் ஒன்றாக ஆக்கி, ர ஆட்சியின்கீழ் இரண்டுநாடுகளையும் தாங் ள கொண்டுவந்துவிட்டன என்று கேட்கி ோம்? ஒரு எடுத்துக்காட்டு உலகில் காட்ட டியாதே! வடநாடும் தென்னாடும் ஒரே ந்திய ஆட்சியின்கீழ்தான் இருக்கவேண்டும் ன்பதை வற்புறுத்திக்கூற, உலகநாடுகள் ணைந்து வருகின்றன என்று சொல்லிக் ட்டுவது பொருத்தமற்றது, உண்மைக்குப் ம்பானது.

லகில் ஒன்றாக இருந்தநாடுகள் சில இரண் க அண்மையில் ஆயின என்பதற்கு எடுத் காட்டுகள் இருக்கின்றனவே ஒழிய, ண்டாக இருந்த நாடுகள் அண்மையில் ன்றாக ஆயின என்பதற்கு எடுத்துக்காட்டே லை. ஒன்றாகஇருந்த இந்தியத் துணைக்கண் பாகிஸ்தான்—இந்தியா என்று இரண் க ஆயிற்று. பாலத்தீன், இசுரேல்—பாலத் என்று இரண்டாக ஆயிற்று. கொரியா, வடகொரிய—தென்கொரியா என்று இரண் டாகவும், இந்தோ சீனா, வட பகுதி—தென் பகுதி என்று இரண்டாகவும், செர்மனி, கிழக்குச் செர்மனி—மேற்குச் செர்மனி என்று இரண்டாகவும், காசுமீர், ஆசாத் காசுமீர்—சம்முகாசுமீர் என்று இரண்டாகவும், பர்மா, கரேனியர்பகுதி—பர்மியர்பகுதி என்று இரண்டாகவும் ஆயின. இப்படிப் பிரிவினைக் காட்சிகளைக் கண்டிருக்கிறோமே யொழிய, இரண்டுநாடுகள் எல்லைக்கோடுகளை அழித்து விட்டு ஒன்றுபட்ட காட்சியை, எங்கே காண முடிந்தது?

எனவே உலகநாடுகள் ஒன்றாக இணைந்து வருகின்றன என்று சுட்டிக்காட்டுவது பொருத்தமற்றது, அறியாமையின்பாற்பட் டது.

திராவிடத்தைவிடச் சின்னஞ் சிறிய நாடுகள் ஏராளமாக இருக்கும்போது, திராவிடம் பிரிந்து வாழ்வது குறுகிய நோக்கம் என்று சுட்டிக்காட்டுவதும் பொருத்தமற்றது, அறி யாமையின் பாற்பட்டதாகும்!

❖ ❖ ❖

வினா : சமதர்மத் திராவிடத்தை அமைக்க திராவிட முன்னேற்றக் கழகத்தாரிடமுள்ள பொருளாதாரத் திட்டம் என்ன?

விளக்கம் : வடநாட்டுத் தொடர்பினின்றும் திராவிடத்தைப் பிரிக்கும் விடுதலைப்போ ராட்ட முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் திராவிட முன்னேற்றக் கழகம், பிரிந்த திராவிடத்தில் எப்படிப்பட்ட பொருளாதாரக் கொள்கை கடைப்பிடிக்கப்படும் என்று கொள்கை விளக் கந்தான் இப்பொழுது செய்யுமே ஒழிய, என்ன என்ன பொருளாதாரத் திட்டங்களை எந்த எந்தத் துறையில், எந்த எந்த அளவில், எந்த எந்தக் காலத்தில், எப்படி எப்படி நிறைவேற் றும் என்பதை இப்பொழுதே வரையறுத்துக் காட்ட இயலாது. பிரிந்த திராவிடத்திற்கு என்று அமைக்கப்படப்போகும் அரசியல் அமைப்பு மன்றமும், பிரிந்த திராவிடத்தில் அமையும் பாராளுமன்றமும் அவ்வப்போது, தேவையான, நடைமுறைக்கு ஏற்ற திட்டங் களை வகுக்கும்.

பிரிந்த திராவிடத்தில் சமதர்மத்தை அடிப் படையாகக்கொண்ட பொருளாதாரக் கொள்கை கடைப்பிடிக்கப்படும் என்பதைத் தான் திராவிட முன்னேற்றக் கழகம் எப்பொழு தும் வலியுறுத்திச் சொல்லிவருகிறது.

'சக்திக்கேற்றபடி எல்லோரும் உழைக்க வேண்டும்; உழைப்புக்கேற்ற ஊதியத்தை எல்லோரும் பெறவேண்டும்; பொதுமக்கள் அனைவர்க்கும் தேவையான-இன்றியமையாத் தொழில்கள் அனைத்தும் அரசாங்கமயமாக்கப் படவேண்டும்; அனைவர்க்கும் தேவைப்படும் இன்றியமையாச் சொத்துக்கள் பொதுச் சொத்துக்களாக ஆக்கப்படவேண்டும்' என்பனபோன்ற கொள்கைகளை நடைமுறைப் படுத்துவதற்கான திட்டங்கள் பிரிந்த திராவிடத்தில் அவ்வப்போது வகுக்கப்படும்.

'சக்திக்கேற்ற உழைப்பு, உழைப்புக்கேற்ற ஊதியம்' என்ற பொருளாதாரக் கொள்கை நல்ல முறையில் நிறைவேறிய பிறகு 'சக்திக் கேற்ற உழைப்பு, தேவைக்கேற்ற வசதி' என்ற பொருளாதாரக் கொள்கை நிலைநாட்டப்படும்,

திராவிட முன்னேற்றக் கழகம் இப்பொழுது கொள்கை விளக்கம் புரிந்துவரும் இன்றியமையாப் பணியில் ஈடுபட்டிருக்கிறது; வாய்ப்பு ஏற்படும்போது ஆட்சியாளரைக்கொண்டு திட்டங்கள் தீட்டி நடைமுறைக்குக் கொண்டு வர முற்படும்.

❖ ❖ ❖

வினா : திராவிடக் கூட்டாட்சி அமைப்பில் மக்களுக்கு உரிமைகள் வழங்கப்படுமா?

விளக்கம் : திராவிடக் கூட்டாட்சி அமைப்பு, ஒரு சனநாயக அமைப்பாகத்தான் இருந்து வரும். சனநாயக அமைப்பில், மக்களுக்கு எந்தவகை உரிமைகள் எந்த அளவுக்குத் தேவைப்படும் என்று, சனநாயக அடிப்படையில், உருவாகும் திராவிட அரசியல் அமைப்பு அவையும், திராவிடப் பாராளு மன்றமும் கருதுகின்றனவோ, அந்த உரிமைகளெல்லாம் வழங்கப்படும். சனநாயக உரிமைகளைப் பறிக்கும் முறையில் சட்டங்கள் தீட்டப்படமாட்டா.

❖ ❖ ❖

வினா : இலங்கைத் தமிழ்ப்பகுதியும் வடநாட்டு திராவிட இனப் பகுதிகளும் திராவிடக் கூட்டாட்சியில் இடம்பெறுமா?

விளக்கம் : இந்திய யூனியனின் டில்லி மத்திய ஆட்சியின்கீழ் அகப்பட்டுத் தவிக்கும் தமிழகம், எந்த எந்த காரணங்களுக்காக வடநாட்டுத் 'தொடர்பினின்றும் விடுபடவேண்டும்' என்று விரும்புகிறோமோ, அந்தக் காரணங்கள் ஆந்திரம்—கருநாடகம் (துளுவம் அடங்கியது)—கேரளம ஆகிய பகுதிகளுக்கும் பொருந்திவருகின்றன. இந்த நான்குப் பகுதிகளும் வரலாற்றாசிரியர்கள் கருத்துப்படி திராவிடப் பகுதிகள் என்று உணர்த்தப்படுவதால், இந்த நான்கும் பிரிந்துபோகும் தனி ஆக்க உரிமைகளோடு கூடிய ஒரு கூட்டாட்சியின் கீழ் அதாவது திராவிடக் கூட்டாட்சியின் கீழ் விளங்குவனவாகும் என்று கூறுகிறோம். இன்றைய அவசியத்தை ஒட்டி இந்தத் திராவிடப் பகுதிகள் நான்கும் திராவிடக் கூட்டாட்சியில் அமையவேண்டும் என்று சொல்லுகிறோம். இலங்கைத் தமிழ்ப்பகுதியும், வடநாட்டுத் திராவிட இனப்பகுதிகளும், தாம் திராவிடக் கூட்டாட்சியில் இணைந்திருப்பதுதான் நல்லது என்ற முடிவுக்கு வருமேயானால் அந்த நிலைமை விருப்பத்தோடு ஏற்றுக்கொள்ளப்படவே செய்யும்.

❖ ❖ ❖

வினா : திராவிட முன்னேற்றக் கழகக் கொடியில் கறுப்பு, சிவப்பு ஆகிய இரு வண்ணங்கள் இருப்பதன் நோக்கம் என்ன?

விளக்கம் : திராவிடம் அரசியல்—பொருளியல்—சமூகவியல் ஆகிய துறைகளில் மிக இழிந்த நிலையில்—தாழ்ந்த நிலையில்—அடிமை நிலையில்—இருண்ட நிலையில் இருக்கிறது என்பதைக் காட்டும் அறிகுறிதான் கறுப்பு வண்ணம். திராவிடம் அந்தத் துறைகளில் உயரவேண்டும்—மேலோங்கவேண்டும் — விடுதலை பெறவேண்டும்—ஒளிபெறவேண்டும் என்பதைக் காட்டும் அறிகுறிதான் சிவப்பு. இயற்கை முறையில் பார்த்தாலும் இருளின் நிறம் கறுப்பு; ஒளிச்சுடரின் நிறம் சிவப்பு. ஒளி ஓங்க ஓங்கத்தான் இருள் நீங்கும். திராவிடம் இருள் நீங்கப்பெற்று ஒளியெய்தவேண்டும். பொதுவாக இழிவுக்கு உலகோர் கூறும் நிறம் கறுப்பு; புரட்சிக்குக் கூறும் நிறம் சிவப்பு'. இந்தக் கருத்தை அடிப்படையாகக் கொண்டுதான் கொடியைப்பொறுத்து "இழிவு ஒழிக! புரட்சி ஓங்குக!" என்று முழக்கமிடுகிறோம். இந்த முழக்கத்தின் கருத்தைத்தான் கொடியிலுள்ள கறுப்பும் சிவப்பும் நமக்கு நினைவூட்டிக்கொண்டிருக்கின்றன.

தையற் கலை

கே.பி.சுந்தரம், G.C.T.

இடுப்புப்பட்டி கால்சட்டை

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

இருந்து 3 வரை 6 அங்.
(5, 4-க்கும் உள்ள அளவு)
இருந்து 1 வரை 6 ,,
(9, 3-க்கும் உள்ள அளவு)
இருந்து 9 வரை $5\frac{1}{4}$ அங்.
($\frac{1}{4}$ முழங்கால் சுற்று அளவு)
இருந்து 9 வரை $5\frac{1}{4}$ அங்.
(9, 11-க்கும் உள்ள அளவு)

13-ல் இருந்து 10 வரை $4\frac{1}{2}$ அங்.
($\frac{1}{4}$ முன்னங்கால் அளவு)
14-ல் இருந்து 10 வரை $4\frac{1}{2}$ அங்.
(13, 10-க்கும் உள்ள அளவு)
15-ல் இருந்து 10 வரை $4\frac{1}{2}$ அங்.
(போல்டிங்)
16-ல் இருந்து 15 வரை 3 அங்.
(கால் பட்டிமடிப்பு)
17-ல் இருந்து 6 வரை 3 அங்.
(1/6 ஸ்கேல்)
18-ல் இருந்து 6 வரை 6 ,,
(1/3 ஸ்கேல்)
19-ல் இருந்து 0 வரை 9 ,,
(6, 4-க்கும் உள்ள அளவு)
20-ல் இருந்து 19 வரை $3\frac{1}{4}$ அங்.
A-ல் இருந்து 0 20 வரை $1\frac{1}{2}$,,
(பிளீட்டு)
21-ல் இருந்து 0 வரை $2\frac{1}{2}$,,
22-ல் இருந்து 19 வரை $10\frac{1}{2}$,,
($\frac{1}{4}$ இடுப்பு +3 அங்.)





23-ல் இருந்து 24 வரை $1\frac{1}{4}$,,
24-ல் இருந்து 4 வரை 3 அங்.

22, 23. 2, 12, 14 எண்ணுக்குக் கீழ் கால் பட்டிவரை இணைத்து நெடுங்கால் வளைவு வரைந்துகொள்ளவும்.

7, C, B, 17 எண்ணுள்ள இடத்தில் புள்ளி வைத்துள்ள வளைவுவரை குறி ஒதுக்கத்திற்காக ஒரு பக்கத்தில் வெட்டி எடுத்துவிடவும்.

முன்பக்கத்தைக் கோட்டின் மீது வெட்டவும். முன்பக்கத்தை ஆதாரமாகக் கொண்டு பின்பக்கம் வெட்டவேண்டும்.

படம்—2

25-ல் இருந்து 7 வரை $1\frac{1}{2}$ அங்.
(1/12 ஸ்கேல்)
26-ல் இருந்து 25 வரை $\frac{1}{2}$ அங்.
27-ல் இருந்து 11 வரை 1 அங்.
27-ல் இருந்து 13 வரை 1 ,,
29-ல் இருந்து 22 வரை 9 ,,
($\frac{1}{4}$ இடுப்பு அளவு+$1\frac{1}{2}$ அங்.)
K-ல் இருந்து 29 வரை $1\frac{1}{2}$,,
(8, 18, 29 எண்கள் வரை சாய்வுக் கோடு வரைந்து பின் பக்கவளைவு அமைத்துக்கொள்ளவும்.)
30-ல் இருந்து 29 வரை $\frac{1}{4}$ அங்.

(தொடரும்)

Regd. No. M 6296

MANR[illegible]

மலாயாத் தமிழர்களுக்கு ஓர் நற்செய்தி

அவ்வை புத்தக நிலையம்

கம்பார் (பேரா)

அறிஞர் அண்ணாதுரை, இரா. நெடுஞ்செழியன் டாக்டர் மு. வரதராசனார், மு. கருணாநிதி, ஏ. வி. பி. ஆசைத்தம்பி ஆகியோரின் கருத்துக்குவியல் களும், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடுகளும், தாயகத்தி லிருந்து வெளியாகும் வார, மாத இதழ்கள் யாவும், மற்றும் சினிமா வசன பாட்டு புத்தகங்களும் சில்லரையாகவும் மொத்தமாகவும் கிடைக்கும்.

மற்றும் கல்கி, ஆனந்தவிகடன், குமுதம் கல்கண்டு, பேசும்படம் முதலான பத்திரிகைகளும் கிடைக்கும்

பள்ளி மாணவர்களுக்குத் தேவையான புத்தகம், நோட்புக், பென்சில் முதலிய இதர சாமான்களும் விலை சரசமாகக் கிடைக்கும்

மலேயாவிலுள்ள தினசரி வார மாத இதழ்களும் கிடைக்கும்.

வியாபாரிகளுக்கு தக்க கழிவு தரப்படும்

நிர்வாகிகள்

சி. அண்ணாமலை, கோ. வரதராசன்

142, ஜாலான் இட்ரீஸ்-கம்பார்.

தமிழ் நாட்டில் தலை சிறந்த

வெண்சங்கு சீயக்காய்தூள்

எங்கும் கிடைக்கும்

எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம்-ராணி ஊதுபத்தி தூள்

வாங்கி உபயோகியுங்கள்

தயாரிப்பாளர் :- வெண்சங்கு சீயக்காய்தூள் தொழிற்சாலை

3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

Edited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M.A.
at MANRAM ACHAKAM at 26, Nainiappan St., Mannadi, MADRAS